இனி இது ரகசியம் அல்ல!

நீதியரசர விக்னேஸ்வரனுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நேற்று என்ன நடக்கக் கூடும் என எதிர்பார்த்து நேற்று இப்பத்தியில் ஒரு விடயத்தை முத் தாய்ப்பாய்க் குறிப்பிட்டிருந்தேன். அதுதான் நேற்று நடத்திருக்கின் றது. பக்கம் 02

பக்கங்கள்: 14

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 15 புதன்கிழமை 29.01.2020 கதிர் 85

# சர்வதேச நீதிமன்றம் செல்ல இப்போது வழி கிடையாது!

## நிலைமையை விளக்குகிறார் சுமந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 29

சர்வதேச விசாரணை முடிவடைந்துவிட்டது. அதன் அறிக்கையும் வெளிவந்துவிட்டது. அதனடிப்படையில்தான் ஜெனீவாத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆகவே அந்தத் தீர்மானங்களில் இலங்கை அரசையும் இணங்கச் செய்து அதனைச் செய்விக்கும் வேலைகள்தான் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித் துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், இந்தத் தீர்மா னத்துடனான சர்வதேச மேற்பார்வையை தொப்பென்று விட்டுவிட்டு சர்வதேச நீதிமன் றத்துக்குப் போவதற்கான வழி இப்போது இல்லை என்றும் குறிப்பிட்டார். பக்கம் 03



## உலக மக்களுக்கு அமைதி வேண்டி யாழ்ப்பாணத்தில் மகா ருத்ர யாகம்




யாழ்ப்பாணம், ஜன. 29

உலகத்தில் உள்ள அனைத்து மக்களின் சுபீட் சத்திற்காக இலங்கையில் முதன்முறையாக ஸ்ரீ மஹா ருத்ர யாகம் யாழ்ப்பாணத்தில் நடைபெற வுள்ளது.

சிவனடியார்கள் மற்றும் பக்கம் 14

## யாழில் விற்கத் தயாரான ஹெரோயினுடன் இரண்டு பெண்கள் உட்பட நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 29

கொழும்பிலிருந்து யாழ்ப்பா ணத்துக்கு வியாபாரத்துக்கு என எடுத்துவரப்பட்ட உயிர்க்கொல்லி ஹெரோய்ன்போதைப்பொருளை பைக்கெற் செய்துகொண்டிருந்த போது 2 பெண்கள், 2 ஆண்கள் என நான்கு பேர் கைது செய்யப் பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பளை, வித்தகபுரம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்த நான்கு பேரும் நேற்றுச் செவ் வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 5 கிராம் 6 மில்லிக்கிராம் அளவு டைய ஹெரோய்ன் போதைப் பொருள் பக்கம் 02

## தளபதிகளை விடுவிக்கக் கோரும் ஜனாதிபதி ஆணைக்குழு மீது விரைவில் சட்ட நடவடிக்கை!

### சுமந்திரன் எம்.பி. எச்சரிக்கை

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.29

11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் விவகாரத்தில் முன்னாள் கடற்படைத் தளபதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணையை இடைநிறுத்தும்படி ஜனா திபதி ஆணைக்குழு விடுத்துள்ள அறிவுறுத்தலைக் கண்டிப்பதாக தெரிவித்துள்ளார் பக்கம் 03

## ரெலோவின் உடைவு ஒரு பொருட்டே அல்ல!

### கூறுகிறார் சித்தார்த்தன்

வவுனியா, ஜன. 29

ரெலோவின் செல்வாக்கு வன்னியிலும், கிழக் கிலுமே இருக்கிறது. எனவே அவர்களது உடைவு இங்கு ஆதிக்கம் செலுத்த முடியும் என்று நான் நினைக்கவில்லை என்று யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

புளொட்டின் வவுனியா பக்கம் 03

## தமிழ் அரசியல் கைதிகளை பணயம் வைக்கின்றது அரசு

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 29

தமிழ் அரசியல் கைதிகளைப் பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு செயற்படுவதற்கு அரசு முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டி யுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந் திரன், அரசின் அந்த முயற்சிக்கு ஒருபோதும் இணங்கப் போதில் லை என்றும் தெரிவித்துள்ளார்.

சிறைகளிலுள்ள தமிழ் அர சியல் கைதிகளை விடுவிப்பதா னால் படையினருக்கு எதிரான குற்றங்களையும் கைவிடுங்கள் என்ற போக்கில் அரசு பேச ஆரம் பித்துள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை செய்யப்பட வேண்டும். கடந்த அரசு ஆட்சிக்கு வந்த போது அது பக்கம் 02

## யாழ். விமான நிலையத்திலும் கொரோனா வைரஸ் சோதனை

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம் சர்வ தேச விமான நிலையத் துக்கு வரும் விமானப் பயணிகளைச் சிறப்புப் பரிசோதனைக்கு உட் படுத்தும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள் ளன என்று சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியா ளர் மாநாட்டில் சுகா தார அமைச்சின் பணிப் பாளர் நாயகம் மருத் துவர் ஜாசிங்க தெரிவிக் கையில் பக்கம் 02

## புதிய அரசமைப்பு முயற்சிகள் தோல்வி கண்டுவிடவில்லை!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 29

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் தோல்வியடைவில்லை எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ.சுமந்திரன், புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஜனாதிபதி கூயியிருக்கும் நிலை யில் அதற்கு நாங்களும் இணங்கி செயற்படத் தயாராக இருக்கிறோம் பக்கம் 03

## கோட்டாவின் கூற்றுக்கு ஐ.நாவின் பதில் என்ன?

### தமிழ் சிவில் சமூக அமையம் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 29

காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் இறந்துவிட்டனர் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியுடனான உத்தியோகபூர்வ சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். இது ஜனாதிபதி கோட்டம்பய ராஜபக்ஷவின் கருத் துக்களுக்கு ஐ. நாவின் பதிலென்ன என்ற கேள்வி எழுகின்றது. பக்கம் 14

## யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இம்முறை புதிய நடைமுறை வரும்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தை இம்முறை புதிய முறைப்படி நடத் தத்திட்டமிடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

ஒவ்வொரு திணைக்களங் கள், துறைகள் வாரியாக இம் முறை யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் குழு வின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் எதிர் வரும் 31ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாவட்ட செயலகக் கேட் போர் கூடத்தில் இடம்பெறவுள் ளது. பக்கம் 02

## வடக்கு – கிழக்கில் பணி புரியும் 4 நீதிவான்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு-கிழக்கில் 4 நீதிவான்களுக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் வருடாந்த இடமாற் றம் வழங்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி பி.சிவகு மாருக்குத் திருகோணமலை நீதிவானாக இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிவான் எம்.எச்.எம். ஹம்சா, அக்கரைப்பற்று பக்கம் 03

காலைக்கதிர் Kalaikathir



## யாழ்.விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் சிகிச்சை மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள அனைத்து மருத்துவர்களுக் கும், பணியாளர்களுக்கும் தேவையான பாதுகாப்பு உடைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் அனைவரதும் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இதில் இவர்கள் எங்கிருந்து வருகின்றார்கள், இலங்கையில் தங்கியிருக்கும் இடங்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இதற்கான ஆவணங்கள் சீனமொழியில் இல்லாததனால், சீன மொழியிலான ஆவணங்கள், படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்களைத் திரட்டுவதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் இடங்களுக்கு தொற்றுநோய் தடுப்பு மருத்து-வர்களைக் கடமையில் ஈடுபடுத்தி அவர்கள் பரிசோதிக்கப்படவுள்ளனர். இதேபோன்று விமானங்களுக்குச் சிறப்புக் காணொலிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் விமானப் பயணிகளுக்கு கொரோனா வைரஸ் தொடர்பில் தெளிவை ஏற்படுத்த முடியும்.

இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்துக்கு வரும் விமானப் பயணிகளைச் சிறப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கப்பல் மூலம் இலங்கைக்கு வரும் பயணிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றார். (ஐ)

## யாழில் விற்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டது. அதன் பெறுமதி சுமார் 3 லட்சம் ரூபாவாகும்.

வீட்டைப் பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர் என்று அறிந்த சந்தேகநபர்கள் சுமார் 10 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை மண்ணுக்குள் போட்டு கலந்துள்ளனர். மிகுதி பைக்கெற்றுக்களில் பொதி செய்யப்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருளே மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் வித்தகபுரத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஆணும் 31 வயதுடைய பெண்ணும் கொழும்பு, மோதரையிலிருந்து வருகை தந்திருந்த 31 வயதுடைய முஸ்லிம் ஆணும் 25 வயதுடைய முஸ்லிம் பெண்ணும் அடங்குகின்றனர்.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சி.டபிள்யூ. சேனாதீர தலைமையிலான சிறப்பு பொலிஸ் குழுவினர் நேற்று மாலை 3 மணியளவில் முன்னெடுத்த சுற்றுக்காவல் நடவடிக்கைகயின்போதே இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபர்கள் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் மீட்கப்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருளும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-07)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாக நாங்கள் நிறைய நடவடிக்கை எடுத்து இருந்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்தப் பொறிமுறையின் மூலமாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு அந்தப் பொறிமுறை தொடர்ந்து நடக்காமல் இருப்பதற்குச் சில சட்டத்தரணிகள்தான் காரணமாக இருந்திருந்தார்கள். அதனால்தான் அந்த விடுதலை தொடர்ந்து தடுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு அந்தப் பொறிமுறையை நாங்கள் கொண்டு செல்ல முடியவில்லை. ஆனால் அதற்குப் பின்னரும் கூட பலர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது எஞ்சியிருக்கிறவர்களின் விடுதலை சம்பந்தமாக நாங்கள் அரசுடன் பேசியிருக்கிறோம். அதில் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே குற்றவாளிகாகத் தீர்க்கப்பட்டவர்கள். ஜனாதிபதியின் மன்னிப்பின் ஊடாக மட்டும்தான் அவர்களை விடுதலை செய்யப்பட முடியும்.

ஜனாதிபதியும் அவரைச் சார்ந்தவர்கள் சிலரும் அண்மைக் காலத்தில் இரு பக்கத்திற்கும் மன்னிப்பு கொடுக்கலாம் என்ற ஒரு கதையை அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். இது எங்களுக்கு முதலிலேயே தெரியும். அதாவது இவர்கள் இப்படித்தான் செய்ய எத்தனிப்பார்கள் என்று. ஆனால் அதையும் இதையும் ஒப்பிட முடியாது.

ஏனென்றால் அரசியல் கைதிகள் பல காலமாக சிறையில் இருந்திருக்கிறார்கள். நீதிமன்றப் பொறிமுறையில் குற்றவாளிகாளகத் தீர்க்கப்பட்டவர்கள். என்ன குற்றத்தைச் செய்தார்கள் என்று குறிப்பாக தீர்க்கப்பட்டிருக்கிறது. அரச தரப்பில் ஒருவரும் இன்னமும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை. ஒருவரும் குற்றவாளியாகத் தீர்க்கப்படவில்லை. ஆகவே முதலில் அது நடைபெற வேண்டும்.

அது நடைபெற்று குற்றவாளிகள் என்றால் அவர்களும் நீண்டகாலமாகச் சிறையில் இருப்பார்கள் என்றால் இரண்டையும் நாங்கள் சமமாகப் பார்க்கலாம். ஆனால் இப்போது அதைச் செய்ய முடியாது.

ஆனால் அரசு இப்பொழுது இருக்கும் அரசியல் கைதிகளைப் பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு இவர்களை விடுதலை செய்வதாக இருந்தால் அரச தரப்பிற்கு எதிராக இருக்கும் குற்றங்களையும் கைவிடுங்கள் என்று சொல்கின்ற ஒரு போக்கிலே தான் பேச ஆரம்பித்திருக்கின்றார். இதற்கு ஒருபோதும் நாங்கள் இணங்கப் போவதில்லை–என்றார். (ஐ-07)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான ஒழுங்கமைப்பை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் முன்னெடுத்துள்ளார்.

கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தால் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் மீளாய்வு, முன்மொழிவுகள் ஆராயப்பட்டு, பிரதேச செயலர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் முன்மொழிவுகள் – பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

தொடர்ந்து விவசாயம், கல்வி, குடிதண்ணீர் – பாதை உள்ளிட்ட உள்ளிட்ட உள்கட்டுமானங்கள், சுகாதாரம் என துறை ரீதியான பிரச்சினைகள் ஆராயப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் தமது முன்மொழிவுகளை இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனிடம் நேரில் சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இன்று புதன்கிழமை பொதுமக்கள் சந்திப்பை நடத்துகின்றார்.

இதன்போது பொதுமக்கள், பொது அமைப்புக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரிடம் நேரில் முன்மொழிவுகளை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*“தேர்தல் சமயத்தில் இந்தத் தீர்ப்பு வராமல் சமாளிக்க வேண்டுமானால் இப்போது – இன்றும் (செவ்வாயன்றும்) வெள்ளியன்றும் – இந்த வழக்கு விசாரணை நடைபெறாமல் தள்ளிப்போட்டால் வாய்ப்புண்டு. வழக்கில் எதிர் மனுதாரர்கள் தரப்பில் மருத்துவச் சான்றிதழ் போன்ற ஏதேனும் ஆவணத்தைச் சமர்ப்பித்து விசாரணைத் திகதியை ஒத்திவைக்கும்படி இன்று (செவ்வாயன்று) கோரப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை”* – என்று நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன்.

வழக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கு – பொதுத் தேர்தல் முடிவடையும் வரை தள்ளிப்போடுவதற்கு – புதிய உத்தி கையாளப்பட்டது. ஆனால் அது நான் குறிப்பிட்ட மாதிரி எதிர் மனு தாரர்களின் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கும் முறையில் அல்ல. வேறு விதத்தில்.

இந்த வழக்கில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் மற்றொரு எதிர்மனுதாரர் மாகாண அமைச்சராகவிருந்த அனந்தி சசிதரன். அவரின் சார்பில் இந்த வழக்கில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகி வந்தவர் சட்டத்தரணி கணேசலிங்கம். அவர் நேற்று முன்தினம் இந்த வழக்குத் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பம் செய்தார். வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் தம்மை வடக்கு மாகாண சபையின் சட்டவாளராக நியமித்துள்ளார் என்றும் தாம் அந்தப் பதவியை ஏற்றுள்ளார் என்றும் அந்த விண்ணப்பத்தில் அவர் தெரிவித்துள்ளார். இந்த வழக்கில் தாம் இதுவரை பிரதிநிதித்துவப்படுத்திய தமது கட்சிக்காரர் அனந்தி சசிதரன் ஒருபுறம். மற்றொரு எதிர்மனுதாரராக ஆளுநர் உள்ளார். அவர் மறுபுறம். ஆகையால் இந்த வழக்கில் தரப்புகளின் நலன்சார்ந்த விடயத்தில் வெவ்வேறு நிலைப்பாட்டைத் தாம் எடுக்கவேண்டியிருப்பதால் தம்மை அனந்தி சசிதரன் சார்பில் முன்னிலையாவதினின்றும் விடுவிக்குமாறு கணேசலிங்கம் அந்த விண்ணப்பத்தில் கோரியிருந்தார்.

தமக்குப் பதிலாக வேறு சட்டத்தரணியை நியமித்து எதிர் மனுதாரர் அனந்தி வழக்கைத் தொடர அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டினார். அந்தக் கோரிக்கையை நீதிமன்றம் நேற்று ஏற்றுக்கொண்டது.

புதிய சட்டத்தரணி வழக்கை முழுமையாகப் படித்து விசாரணையை முன்னெடுக்க அவருக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் கோரப்பட்டது.

அப்படியானால் வழக்கை பெப்ரவரி, மார்ச்சில் ஒரு திகதியில் நடத்தலாம் என்றார் மனுதாரர் டெனீஸ்வரன் தரப்பு சட்டத்தரணி.

அந்தக் காலத்தில் பொதுத் தேர்தல் நடவடிக்கை வந்து விடும். அத்தோடு தமது கட்சியைப் பதிவு செயவதற்காகத் தேர்தல் ஆணையாளரோடும் இக்காலகட்டத்தில் தாம் தொடர் உரையாடல்களில் ஈடுபடவேண்டியிருக்கும். ஆகையினால் வழக்கைத் தள்ளிப் போடும்படி கோரினார் விக்னேஸ்வரன்.

விக்னேஸ்வரன் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வழக்கு ஏப்ரலையும் தாண்டித் தள்ளிப் போடப்பட்டது. ஏப்ரல் நீதிமன்ற விடுமுறை காலமும் கூட. ஆகையினால் வழக்கு மே 18,19,20 ஆம் திகதிக்கு – அதாவது மூன்றரை மாதங்களுக்கு – தள்ளிப்போடப்பட்டது.

இப்போது இலங்கையின் நீதித்துறை நார்நாராகப் பிய்த்து உதறப்படுகின்றது. கிழி கிழி என்று கிழித்தெறியப்படுகின்றது. நீதித்துறை மீது அதிகாரத் தரப்பின் தலையீடு பற்றி அதிகம் பேசப்படுகின்றது. நீதித்துறை மீதான தலையீட்டுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போகின்றார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூட நேற்றுக் கருத்துக் கூறியிருக்கின்றார்.

இவை எல்லாம், வெளியார் நீதித்துறை மீது தலையீடு செய்வது பற்றிய குற்றச்சாட்டு; முறைப்பாடு.

ஆனால் அதே நீதித்துறை நீதியாக நடக்காமல் இழுபட்டு, தனது தரத்தைத் தானே தாழ்த்திக் கொள்வதற்கு முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிரான இந்த வழக்கே நல்லதோர் உதாரணம் என்று வெளிப் படையாக இலங்கை நீதித்துறையின் மீது பச்சையாகவே நான் குற்றஞ் சுமத்த விரும்புகிறேன்.

நீதிமன்றம் ஒன்றின் உத்தரவை – கட்டளையை – விமர்சிப்பதும், கண்டிப்பதும் சில சமயங்களில் நீதிமன்ற அவமதிப்பாகக் கூட அர்த்தப்படக் கூடியது.

ஆனாலும் சேற்றை அகற்றுவதற்கு சேற்றுக்குள் இறங்குவது போல இந்த வழக்குக்குள்ளும் இறங்கி சிலவற்றை விமர்சிப்பது – வெளிப்படுத்தி அம்பலப்படுத்துவது – ஓர் ஊடகவியலாளனின் கடமை என நான் நினைக்கின்றேன்.

இந்த வழக்கில் வழக்காளி டெனீஸ்வரன். அவரது கோரிக்கை சரி, பிழை என்று எந்தப் பக்கமும் நான் சாராமல் விடயத்தை அம்பலப்படுத்த விரும்புகிறேன்.

தம்மை அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றியமை சட்டவிரோதமானது என டெனீஸ்வரன் நீதிமன்றத்திடம் முறையிடுகின்றார்.

வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம் டெனீஸவரனைத் தொடர்ந்து பதவியில் தொடர அனுமதிக்கும்படி இடைக்கால உத்தரவை விடுகின்றது. அதை ஏற்றுக்கொண்டு செயற்பட விக்னேஸ்வரனும் பிற எதிர் மனுதாரர்கள் இருவரும் மறுத்து விட்டனர் என்பது டெனீஸின் முறைப்பாடு. அதன்மூலம் அவர்கள் நீதிமன்றத்தின் உத்தரவை நிராகரித்து நீதிமன்றத்தை அவமதித்து விட்டனர் என்பது அவரது வழக்கு.

மூல வழக்கை விசாரித்த நீதிமன்றம் டெனீஸ்வரனை விலக்கியமை சட்டவிரோதமானது என்ற இறுதித் தீர்ப்பையும் வழங்கிவிட்டது.

ஆனால் இதன்மேல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தீர்ப்பை கூறாமல் இரண்டு வருடங்களுக்கு மேல் இழுத்தடிக்கின்றது அதே நீதிமன்றம்.

தன்னை அவமானப்படுத்திய நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலேயே – ஒரு சின்ன விடயத்திலேயே – தீர்ப்பை வழங்காமல் காலத்தை இழுத்தடிக்க வழி செய்துநிற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்ற மேனிலை நீதிமன்றங்களினால் இலங்கையின் நீதித்துறை மேன்மையுறும் என எதிர்பார்ப்பது வெறும் பகல் கனவு. இலங்கையின் நீதித்துறை இலாயக்கற்றது என்பதற்கு இந்த வழக்கே நல்ல சான்று.

இது அரசியல் தொடர்பான வழக்கு; அரசியல் பதவி நிலை தொடர்பான முறையீடு.

தேர்தல்களைக் காட்டி இத்தகைய வழக்குகளின் விசாரணையை ஒத்திவைக்க இணங்குவது நீதித்துறைக்கு அவமானம்; அபத்தம்; இழுக்கு!

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றத் தவறியதாகக் கூறப்படும் – அரசியல் விவகாரம் சார்ந்த – ஒரு வழக்கில் தீர்ப்பு தாமதப்படுத்தப்படுகின்றது. இழுத்தடிக்க அனுமதிக்கப்படுகின்றது. தேர்தலைக் காட்டி விசாரணையைத் தளளிப் போட இடமளிக்கப்படுகின்றது.

முறைப்பாட்டுக்கு உள்ளாகியிருக்கும் நீதிமன்ற அவமதிப்பு இடம்பெற்ற பின்னர் ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடந்து விட்டது. ஒரு பொதுத் தேர்தல் கடந்து போக நீதிமன்றம் இப்போது அனுமதித்து நிற்கின்றது.

அடுத்த விசாரணைத் திகதி குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் சில சமயங்களில் மாகாண சபைத் தேர்தலும் அறிவிக்கப்படலாம். இந்த வழக்கில சம்பந்தப்பட்ட விக்னேஸ்வரன், அனந்தி, சிவநேசன் போன்றோர் மாகாண சபைத் தேர்தல்களிலும் பங்குபற்றுகின்றனர் என்று குறிப்பிட்டு விண்ணப்பிக்கப்பட்டால், அந்தத் தேர்தல் முடியும் வரை கூட மீண்டும் இந்த வழக்கு ஒத்திவைக்கப்படலாம். அப்படி அந்தத் தேர்தல் தாண்டிச் செல்லவும் ‘இளிச்சவாயர்’ மாதிரிப் பார்த்திருந்துவிட்டு அதன் பின்னர் ஆறுதலாய், சாவகாசமாக வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் போல.

‘தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி’ என்பது போல மூன்று தேர்தல்கள் முடித்த பின்னர் அரசியல் விவகாரம் தொடர்பான இந்தவழக்கில் தீர்ப்பு வந்தென்ன, வராமல் விட்டென்ன?

முதலில் நீதித்துறைதன்னை ஒழுங்குபடுத்தி, வீண் – வேண்டுமென்ற காலதாமதத்துக்கு இடமளிக்காமல் – நீதி நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்பது அந்த நீதிமன்றத்தின் வழக்கு. அதுவே (நீதிமன்றமே) தனக்காகத் தொடர்ந்ததாகக் கருதப்பட வேண்டிய வழக்கு. தான் சம்பந்தப்பட்ட வழக்கிலேயே நீதியை நிலைநாட்ட – வீண் தாமதங்களுக்கு இடமளிக்காமல் நீதியை உத்தரவாதப்படுத்த – தகுதியற்றிருக்கும் நீதிமன்றங்கள் வெளி அதிகாரத் தரப்பாரின் தலையீடுகளால் இலகுவாகப் பந்தாடப்படுவதில் வியப்பில்லை. அது தான் நடக்கும்.

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

புதிய அரசமைப்பு முயற்சி இன்னமும் தோல்வியடைந்ததாக நாங்கள் கருதவில்லை. ஏனென்றால் ஜனவரி 3 ஆம் திகதி ஜனாதிபதி தனது உரையில் இந்த நாட்டுக்கு ஒரு புதிய அரசமைப்பு தேவை என்று சொல்லியிருக்கிறார். அதில் புதிய அரசமைப்பிற்கு நான்கு விடயங்கள் தேவை என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அதில் ஒன்று நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை, இரண்டாவதுமாகாணசபைகள்.மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் முறை, நான்காவது நீதிமன்ற நீதித்துறைச் சுயாதீனம். ஆக நீதித்துறைச் சுயாதீனத்துக்காக புதிய அரசமைப்பு தேவையில்லை. ஆனால் மற்றைய மூன்று விடயங்களும்தான் நாங்கள் ஏற்கனவே கடந்த நான்கரை வருடங்களாகச் செய்த அரசமைப்புப் பேரவையில் நாங்களும் அடையாளப்படுத்திய மூன்று விடயங்களாக இருக்கின்றன.

ஆகவே அதனை நாங்கள் அதனை முன்னெடுப்பதற்குத் தயார் என்று சொல்லியிருக்கிறோம்.

ஜனாதிபதியுடன் நாங்கள் பேச வேண்டுமென்று சொன்ன போது அவரும் எங்களுடன் பேச வேண்டுமென்று சொல்லியிருந்தார். ஆனால் அதற்கான நடவடிக்கைகளை இன்னமும் அவர்கள் எடுக்கவில்லை. அதற்குப் பிறகு கூட்டமைப்போடு மட்டுமல்ல எல்லா தரப்போடும் பேச வேண்டுமென்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சொல்லியிருந்தார். யாரோடும் பேசட்டும். ஆனால் கூட்டமைப்போடு பேசுவதற்கான திகதியையும் இடத்தையும் சொல்லுங்கள் என்று கேட்டுள்ளோம். அந்த வகையில் நாங்கள் பேசுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம்–என்றார். (ஐ–07)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.நகரிலுள்ள அவரது இல்லத்தில்நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கால அவகாசம் என்று எவரும் எவருக்கும் ஒரு காலமும் கொடுத்தமை கிடையாது. இது சம்பந்தமாக ஊடகங்களுக்கும் தொடர்ச்சியாக மூன்று, நான்கு வருடங்களாக விளங்கப்படுத்தியும் விளங்கமாட்டோம் என்று செயற்படுகின்றார்கள். இன்றைக்கும் அப்படியான கேள்வியாகத்தான் இது முன்வைக்கப்படுகிறது. அதேபோல சர்வதேச விசாரணை வேண்டாம், கலப்பு நீதிமன்றம் போதும் என்று சொன்னதும் தவறான புரிதல்.

சர்வதேசவிசாரணையொன்று நடந்தது. இதைப் பற்றியும் தவறான புரிதல் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதாவது சர்வதேச விசாரணை நடந்து முடிந்துவிட்டது என்று சுமந்திரன் சொல்கிறார் என்று பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. உண்மையில்அதுநடந்துமுடிந்துவிட்டதுதான். அதன் அறிக்கை யொன்றே 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14 ஆம் திகதி ஜெனிவாவில் 255 பக்கங்களைக் கொண்ட அறிக்கையாக வெளியிடப்பட்டது.

விசாரணை முடியாமல் அந்த அறிக்கை வெளிவந்திருக்காது. அந்த விசாரணைக்குப் பெயர் ஓ.ஐ.எஸ்.எல். ஆங்கிலத்தில் அவ்வாறுதான் அதைச் சொல்லுவார்கள். அதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் சையிட் வெளியிட்டார். 20014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சர்வதேச விசாரணை நடந்து அதன் அறிக்கை வெளிவந்தது. ஆகவே அந்த விசாரணை முழுமையான சர்வதேச விசாரணை. அதில் கலப்பு இருக்கவில்லை. உள்நாட்டு விசாரணையாளர்கள் இருக்கவில்லை.

அந்த அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகள் செய்யப்படவேண்டும். நீதிமன்றத்துக்கு முன்பாகக் கொண்டுவரப்படவேண்டும். அது எப்படியான ஒரு பொறிமுறையாக இருக்கவேண்டும் என்பதில்தான் இந்தக் கலப்பு நீதிமன்றம் என்ற ஒன்று வந்தது. அது கடந்த 2015 ஆம் ஆண்டு அதே நேரத்தில் அதாவது அவருடைய அறிக்கை 16 ஆம் திகதி வெளிவந்தது. ஒக்ரோபர் 1ஆம் திகதி தீர்மானத்தில் இந்தக் கலப்பு நீதிமன்றம் என்ற சொல் பாவிக்கப்படாவிட்டாலும் ஒரு கலப்பு நீதிமன்றப் பொறிமுறை உள்ளடக்கப்பட்டது.

அதற்கு உதாரணம் ஒரு நாட்டில் சிலரைக் குற்றவாளிகளாகத் தீர்த்து அவர் சம்பந்தமாக ஒரு நீதிமன்ற நடவடிக்கை செய்ய வேண்டுமாக இருந்தால் அது அந்த நாட்டுச் சட்டங்களோடு இணங்கிச் செய்யவேண்டும். தனியாக ஒரு சர்வதேச மட்டத்தில் ஒரு நீதிமன்றத்தை நியமித்துவிட்டால் இலங்கை அதற்கு இணங்கமாட்டாது. ஏனென்றால் ரோம் பிரகடனத்தில் அவர்கள் கையெழுத்துப் போடவில்லை. ஆகவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் போக முடியாது. இன்னொரு நீதிமன்றத்தை உருவாக்கினால் அவர்கள் அதற்கு இணங்கமாட்டார்கள். ஆகவே இணங்காத ஒரு பொறிமுறையில் ஒருவரையும் அவர்கள் மீது தாக்கம் செலுத்தும் வண்ணம் ஒரு குற்றவியல் நீதிப் பொறிமுறையைச் செய்ய முடியாது.

அவ்வாறு செய்து தீர்ப்புக் கொடுத்தாலும் அவர் இங்கு சுயாதீனமாகத்தான் இருப்பார். அவரைக் கைது செய்ய முடியாது. இந்த நாட்டுப் பொறிமுறையோடு சேர்த்து செய்தால் தான் அது நடைமுறையில் செயற்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆகவே இவை எல்லாவற்றையும் அனுசரித்துத்தான் சர்வதேச நாடுகளோடும் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளோடும் நாங்கள் இணங்கிப் பேசி (அது சர்வதேச பொறிமுறை என்று பேசிக் கொண்டிருக்கின்ற மற்றவர் அலற்ற) இது உண்மையாக நடைமுறைப்படுத்தக் கூடிய விடயமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த 30.1. என்ற தீர்மானத்தில் சர்வதேச நீதிபதிகளும், வழக்குத் தொடுநர்களும், விசாரணையாளர்களும், சட்டவாளர்களும் என்று நான்கு பகுதியினரைக் குறிப்பிட்டு அவர்கள் பங்குபற்றும் ஒரு நீதித்துறை அல்லது நீதிமன்றப் பொறிமுறை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது சரியான முடிவு. அப்படியான ஒன்றுதான் நடைபெற்றிருக்க வேண்டும். அந்த நிலைமைக்கு நாங்கள் இன்னமும் வரவில்லை. ஆனால் அந்தத் தீர்மானம் இருக்கிறது.

மேலும் கால அவகாசம் என்று சொல்லப்படுவது 30.1 என்ற தீர்மானம் சம்பந்தமாக 18 மாதங்களில் இறுதியான ஒரு அறிக்கை கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த 18 மாதம் மார்ச் 2017 ஆம் ஆண்டு முடிவடைந்தது. அந்த அறிக்கையோடு விடயம் முடிந்திருந்தால் அதற்குப் பிறகு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு இந்தத் தீர்மானம் சம்பந்தமாகவும் இலங்கை சம்பந்தமாகவும் மேற்பார்பார்வை செய்வதற்கு எந்தவிதமான ஆணையும் இருந்திருக்காது.

ஒரு தீர்மானம் ஒன்று நிறைவேற்றி அதற்கு ஒரு காலத்தைக் கொடுத்தால் தான் அந்தக் காலத்தில் அவர் செயற்படலாம். ஆகவே 18 மாதம் முடிவடையும்போது அதனோடு விடயம் முடிந்திருந்தால் அதற்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் இது சம்பந்தமாக ஏதும் செய்திருக்க முடியாது. ஆகையினால் தான் 34.1 என்ற இன்னொரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள்.

அந்தத் தீர்மானத்தின் நோக்கம் என்னவென்றால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் மேற்பார்வையை நீடிக்கும் தீர்மானம் தான் அது. சர்வதேச மேற்பார்வையை நீடிக்கின்ற தீர்மானம்– அது அத்தியாவசியமான தீர்மானம். அதற்கு நாங்கள் நாடுகளுடைய ஆதரவைக் கேட்டோம். அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னோம். இல்லையென்று சொன்னால் அதற்குப்பிறகு எந்தவித சர்வதேச மேற்பார்வையும் இருந்திருக்காது. அதைத் தான் கால அவகாசம் கொடுக்கின்றோம், கால அவகாசம் கொடுக்கிறோம் என்று பொய்ப் பரப்புரைகளைச் செய்து ஊடகங்களும் இன்று வரைக்கும் அதே பொய்ச் சொற்களை பாவித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

34.1 இரண்டு வருட காலத்திற்குப் பிறகு ஒரு அறிக்கையை ஆணையாளருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னது. 2019 இல் மார்ச் மாதத்தில் அது வந்தபோது இன்னமும் இலங்கை அரசு முழுமையாக எதனையும் செய்து முடித்திருக்கவில்லை. ஆகவே அது செய்த முடிக்கும் வரை சர்வதேச மேற்பார்வை நீடிக்கப்பட வேண்டுமென்பதற்காக 40.1என்கின்ற இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஒவ்வொரு தீர்மானத்தையும் நிறைவேற்றுவது இலகுவான விடயமல்ல. உறுப்பு நாடுகளுடன் முதலில் பேசவேண்டும். இலங்கை அரசோடு இருக்கின்ற நாடுகளுடனும் பேசவேண்டும். ஒவ்வொரு மார்ச், பெப்ரவரிக்கு முன்னர் ஜெனிவாவுக்குச் சென்று அந்த நாடுகளுடன் நான் பேசியிருக்கிறேன். அதில் இருந்துதான் இந்தத் தீர்மானங்கள் உருவாக்கப்படுகின்றன. ஏன் அதை நாங்கள் செய்கின்றொம் என்றால் சர்வதேச பிடி விடுபடக்கூடாதென்பதற்காகத் தான்.

ஆகவே கால அவகாசம் கொடுத்தது என்பது முழுக்க முழுக்க ஒரு பொய்யான பரப்புரை.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவை ஒரு நாட்டைக் கட்டுப்படுத்தும் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது. அதைப் பாதுகாப்புச் சபை மட்டும்தான் நிறைவேற்றலாம்.

சர்வதேச நீதிமன்றத்துக்குப் போகவேண்டுமென்று சொல்கிறார்கள். சர்வதேச நீதிமன்றத்துக்குப் போவதற்கு இப்போது வழி இல்லை. கையில் இருக்கும் பொறிமுறையைத் தொப்பென்று போட்டுவிட்டு, செய்ய முடியாத ஒன்றைச் செய்வோம் என்று அவர்கள் சொல்வது எந்தவிதத்திலும் எங்கள் மக்களுக்கு நியாயமான ஒரு விடயமல்ல–என்றார். (ஐ–07)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாவட்ட நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நீதிவான் திருமதி நளினி சுபாகரன், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவானும் சிறுவர் நீதிமன்ற நீதிவானுமாக இடமாற்றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவானும் சிறுவர் நீதிமன்ற நீதிவானுமான திருமதி காயத்திரி சைலவன், பருத்தித்துறை நீதிவானாக இடமாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன், நாடுமுழுவதும் 34 மாவட்ட நீதிபதிகள், நீதிவான்களுக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றம் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எச்.சஞ்சீவசோமரத்ன அறிவித்துள்ளார். (ஐ)

## ரெலோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாவட்டத்தலைமை அலுவலகம் கோவில்குளத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வருகின்ற தேர்தல் முக்கியத்துவமானதாகவே இருக்கிறது. எனவே தமிழ்மக்கள் ஒற்றுமையாக வாக்களித்து அவர்களின் பலத்தை நிரூபிக்கவேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் சிங்கள தேசியவாதம் பேசப்படுவதுடன் தமிழ் மக்களின் அபிலாசைகள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமையை பார்க்கின்றோம்.

எனவே நாம் அனைவரும் பிரிந்து நிற்கின்றபோது தமிழ் மக்களின் பலமே பாதிக்கப்படும்.

வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் எமது கட்சி சார்பில் இரு வேட்பாளர்களை களம் இறக்கவுள்ளோம். இன்னும் ஓரிரு வாரங்களில் மாவட்டக் குழு தீர்மானித்து அந்த வேட்பாளர்கள் யார் என்பதை இறுதி செய்து அறிவிப்போம். எமது வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் நிச்சயம் இருக்கின்றன. தேர்தலின்போது கூட்டமைப்பை விட்டுப் பலர் சென்றிருக்கின்றார்கள். சிலர் கட்சியாகவே போயிருக்கிறார்கள். ரெலோவில் இருந்து கூட யாழில் இருந்து சிலர் சென்றிருக்கின்றனர் என்று அறிவித்துள்ளார்கள்.

கூடுதலாக ரெலோவின் செல்வாக்கு வன்னி மாவட்டத்திலும், கிழக்கிலும் இருக்கிறது. எனவே அந்த உடைவு இங்கு எப்படி ஆதிக்கம் செலுத்தும் என்று தெரியவில்லை.செலுத்தமுடியும் என்று நினைக்கவில்லை. அந்தக் கட்சியைச் சேர்ந்த முக்கிய இருவர் பிரிந்துள்ளனர். பெரும்பான்மையானவர்கள் ரெலோவுடன்தான் நிற்கிறார்கள். எனவே பலமாக இருக்கிறார்கள் என்பதை நம்புகிறேன்–என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

ஆணைக்குழுவின் நடவடிக்கைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஓர் உத்தரவிட்டுள்ளது. 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் வழக்கு தொடர்பான விவகாரம் இது.

இந்த வழக்கு சில தினங்களின் முன் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், இன்று குற்றப்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டாம், அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு ஒரு உத்தரவிடப் போகிறது என, ஆணைக்குழு என்ன உத்தரவிடப் போகின்றது என்பதைத் தெரிந்து கொண்டு சமர்ப்பணம் செய்திருந்தார்கள். ஆனால் நீதிமன்றம் அதை ஏற்கவில்லை. குற்றப்பத்திரம் எதிரிகளிடம் கையளிக்கப்பட்டது.

இதில் முக்கியமான எதிரி முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட. அவர் பிணையில் வெளியிலுள்ள போதும், வழக்குக்கு முன்னிலையாகவில்லை. அடுத்த வழக்கு தவணையில் அவரை முன்னிலையாகும்படி அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் ஜனாதிபதி ஆணைக்குழு வசந்த கரன்னகொட, தஹநாயக்க ஆகியோரை வழக்கிலிருந்து விடுவிக்கும்படி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது. இது மோசமான அரசியல் தலையீடு என்று தென்படுகிறது. சட்டமா அதிபர் திணைக்களம், சுயாதீனமாக இயங்குவது. வழக்கமாகச் சட்டமா அதிபர் திணைக்களம் அரசின் கைக்கூலியாக செயற்படுவதாகத்தான் இங்கு குறிப்பிடுவோம். ஆனால், இங்கு சட்டமா அதிபர் திணைக்களம் முன்னெடுத்த வழக்கை, ஜனாதிபதி ஆணைக்குழுவின் மூலம் தடுக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் மிகப்பெரியது. நேரடிச் சாட்சியத்துடன் அரச படையினரிடம் கையளிக்கப் பட்டதற்கு ஆயிரமாயிரம் பேர் உள்ளனர். இதில் ஒரு விடயமும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை. ஐ.நாவுக்கு கண்துடைப்பு முயற்சியாக 11 தமிழ் இளைஞர்கள் விவகாரத்தைச் சட்டமா அதிபர் திணைக்களம் முன்னெடுத்தது. மற்ற விடயங்கள் முன்னெடுக்கப்படாவிட்டாலும், இந்த ஒரு விடயமாவது சரியாக முன்னெடுக்கப்படுகிறதா என்பதை நாங்கள் அவதானித்துக் கொண்டிருந்தோம்.

கொழும்பில் இந்த இளைஞர்கள் கப்பம் பெறுவதற்காகக் கடத்தப்பட்டவர்கள். சிலர் சார்பில் கப்பம் கொடுக்கப்பட்டுமுள்ளது.. இதன் பின்னர் இவர்கள் திருகோணமலை கடற்படைத் தளத்தில் கொல்லப்பட்டனர் எனக் குற்றப்புலனாய்வுத்திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்தது. அந்தவேளை கடற்படைத்தளபதியாக இருந்தவர், கடற்படை புலனாய்வாளர்கள் ஆகியோர் தொடர்பில் சாட்சியங்கள் இருந்ததால், அவர்கள் மீது குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது.

இது கோட்டா பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது நடந்தது. ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது, தேர்தல் முடிந்த மறுநாள்– 17ஆம் திகதி காலை – விடுவிப்பேன் என்றார். 17ஆம் திகதி யாரும் விடுவிக்கப்படாவிட்டாலும், அது இப்போது மேற்கொள்ளப்படுகிறது.

நீதித்துறையில் தலையீடு செய்யும் இந்த நடவடிக்கையை கண்டிக்கிறோம். நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களத்தில் தலையீடு செய்யப்படும் இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்–என்றார். (ஐ–07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பேரினவாத அநீதிச் சிந்தனை

அரசியல் மோட்சத்துக்குப் புக ஒரே கதி பேரினவாதமே எனக் கருதி அதைப் பற்றிப் பிடிக்கத் தயாராகி விட்டன தென்னிலங்கைக் கட்சிகள் என்பது வெளிப்படையாகி வருகின்றது.

பேரினவாத மேலாண்மையை முன்னிறுத்தி, அதை மட்டுமே துரும்பாகப் பயன்படுத்தி, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ தரப்பு பெரு வெற்றியீட்டியிருப்பதால் அதே தடத்தில் தனது பாதையையும் மாற்றிக் கொள்ளும் தீவிர முயற்சியை ஐக்கிய தேசியக் கட்சியும் நாடுகின்றது.

சிறுபான்மையுடன் சமரசம், சமத்துவம் பேண விரும்பும் ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தில் இருந்து வெட்டி, அகற்றி, வெளியேற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சியின் பின்புலமாக இருப்பதும் இந்த விடயம்தான்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை, பௌத்த, சிங்களப் பேரினவாத சிந்தனையில் உள்ள தென்பகுதியின் பெரும்பான்மை வாக்குகளைத் தம் பக்கம் திருப்பவே முடியாது – அதனால் தெற்கில் அந்த மேலாண்மைவாதப் போக்கைப் பிரதிபலித்து நிற்கும் ராஜபக்ஷக்களையோ, பொதுஜன பெரமுனவையோ அசைக்கவே முடியாது – எனக் கவலைப்படும் ஐ.தே.கவினர், அந்தப் பிரச்சினையைச் சமாளித்து, மீண்டும் பெரும் அரசியல் சக்தியாக, அதிகாரத்துக்கு வலுவுடன் வருவதற்கு இரட்டை மார்க்க அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன.

அந்தத் தடத்தில் முதலாவது – சிறுபான்மையினருடன் சமரசம் செய்து, சமத்துவம் பேணி, அவர்களை அனுசரித்துப் போகின்றமைக்கு முன்னுரிமை கொடுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஐ.தே.கட்சித் தலைமைத்துவத்தைப் பிடுங்குவது, அதன் மூலம் சிறுபான்மையிரை அரவணைப்பதில் முக்கிய இடம் கொடுக்கும் தரப்பு ஐ.தே.கட்சி என்ற பெயரை தென்னிலங்கைப் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் மனதில் இருந்து துடைத்தழிப்பது.

அடுத்தது – ராஜபக்ஷக்கள் மற்றும் பொதுஜன பெரமுனவினரை விட பௌத்த, சிங்களப் பேரினவாதமும், மேலாண்மைச் சிந்தனையும், மேலாதிக்கக் கருத்துப் போக்கும் உடையது ஐ.தே.கட்சியே என்று காட்டும் விதத்தில் இனவாதப் பிரசாரத்தை முழு அளவில் முன்னெடுப்பது.

இந்த இரட்டைத் தடத்தில் ஐ.தே.கட்சி தனது புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளது என்பது கண்கூடு.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இப்போது கூறும் கருத்துகள் அதை உறுதிப்படுத்துகின்றன.

நேற்று வரை ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பின்னால் நின்றவர் அவர். நாடாளுமன்றத் தேர்தலில் வேறு கட்சியில் போட்டியிட்டுத் தோற்றுப் போய் அரசியல் அந்தகார நிலையில் இருந்த சரத் பொன்சேகாவுக்குத் தமது கட்சியில் இடமளித்தமை மட்டுமல்லாமல், தமது கட்சிக்குரிய தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தையும் வழங்கி அவரை அமைச்சருமாக்கினார் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால், தமது அரசியல் எதிர்காலத்துக்காவும், அரசியலில் தாம் தொடர்ந்து பிழைத்து நிற்பதற்காவும், ரணிலின் முதுகில் சரத் பொன்சேகாவும் குத்தத் தொடங்கி விட்டார். அவரது பகிரங்கப் பேச்சுகள் அதை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தோல்வியுற்றமைக்கு கடந்த அரசு – ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு – நிதி ஒதுக்கீடுகளைக் கையாண்ட முறைமையும் ஒரு காரணம் என்று அவர் பகிரங்கக் கூட்டம் ஒன்றில் அறிவித்திருக்கின்றார்.

கடந்த அரசு வடக்கு, கிழக்கிற்கு ஆறாயிரத்து முந்நூறு கோடி ரூபாவை ஒதுக்கியது. ஆனால் 18 லட்சம் மக்களைக் கொண்ட கம்பஹா மாவட்டத்துக்கு எதுவும் ஒதுக்கப்படவில்லை எனக் குறை கூறியிருக்கின்றார் சரத் பொன்சேகா.

உண்மையில் வடக்கும், கிழக்கும் சுமார் இரண்டரை தசாப்த காலம் – இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு மேல் – யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவை. பெரும் போரழிவுகளையும், பேரழிவுகளையும் சந்தித்த பிரதேசம். அந்த அழிவுகளிலிருந்து மீளுவதற்கு வடக்கும், கிழக்கும் விசேடமாகக் கவனிக்கப்பட்டு, மேலே தூக்கி விடப்பட வேண்டும்.

ஆனால், யுத்தம் முடிந்து பத்தாண்டுகள் கடந்த பின்னரும் கூட, அந்த விசேட கவனிப்பு வடக்கு, கிழக்குக்குக் காட்டப்படவில்லை என்பதே தமிழர்களின் பெரும் ஆதங்கம், எரிச்சல், கோபம், சீற்றம் எல்லாமுமே.

ஏதோ அள்ளித் தெளிப்பது போல அங்கு கொஞ்சமும், இங்கு கொஞ்சமுமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை உண்டு. அதையே பெரும் விடயமாகக் காட்டி பேரினவாதத் தீயை உசுப்பி விடும் வேலைதான் இங்கு நடந்து வருகின்றது.

யுத்தம் முடிந்து பத்தாண்டுகள் கடந்த பின்னரும் கூட, தமிழர் தரப்பின் பிரதான கட்சிகள் அரசுத் தரப்பில் அரசின் பங்காளிகளாகச் சேரவில்லை. நாடாளுமன்றில் எதிர்கட்சித் தரப்பில் இருந்தபடி அரசுக்கு உதவி, ஒத்தாசை கொடுத்து, முண்டு கொடுத்தன என்பது உண்மைதான். அந்த அடிப்படையில் வடக்கு, கிழக்குக்கு சற்று நிதி அவ்வப்போது கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கலாம். 'யானைப் பசிக்கு சோளப் பொறி போல' – மூக்குத்தூள் மாதிரி – அள்ளித் தெளிக்கப்பட்ட அந்த நிதி உதவியே பேரினவாதத்தை இப்படிக் கிளப்புமானால், உண்மையில் – நீதி, நியாயமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு எப்போது தென்னிலங்கை அரசினால் வடக்குக் கிழக்குக்கு வழங்கப்படவேமாட்டாது என்பதே அதன் பொருளாகும்.

# பழைமையான வெள்ளிமலை பிள்ளையார் ஆலயத்தைப் புனரமைக்க நடவடிக்கை



மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு – பொலநனவை எல்லைப் பகுதியில் கடந்த யுத்த சூழ்நிலை காரணமாக அழிவடைந்த பழைமை வாய்ந்த பிள்ளையார் ஆலயமான வெள்ளிமலை பிள்ளையார் ஆலயத்தை மீள அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு – பொலநறுவை எல்லைப் பகுதியான வெலிக்கந்தையில் சுமார் இரு நூறு வருடங்களுக்கு முன்னர் இந்த ஆலயத்தில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் கடந்த 30 வருடகால யுத்த சூழ்நிலை காரணமாக இந்த ஆலயம் வழிபாடுகள் இன்றி கைவிடப்பட்டிருந்த நிலையில், ஸ்ரீரமணமகரிசி அறப்பணி நிலையத் தலைவர் மா.செல்லத்துரை மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அதனைப் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஆலயத்தை அமைப்பதற்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் முதல் கட்டமாக ஐந்து இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. (ஐ)

# வவுனியாவில் தொடரும் சோதனை நடவடிக்கை



வவுனியா, ஜன. 29

வவுனியா – புளியங்குளம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 5 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஓமந்தை, புளியங்குளம் அதனை அண்மித்த பகுதிகளில் கடந்த சில நாள்களாக மோப்ப நாயின் உதவியுடன் சோதனைகள் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் புளியங்குளம் புதூர் பகுதியில் இராணுவச் சோதனை சாவடியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை வழி மறித்து சோதனையிட்ட சமயத்தில் 3 கிலோகிராம் கேரளா கஞ்சாவினை பயணப்பொதியில் வைத்திருந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அதில் ஒருவர் கடற்படைச் சிப்பாய் ஆவார்.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இ.போ.சவை சோதனையிட்டபோது, 2 கிலோ கிராம் கஞ்சா சிக்கியது. அதைக் கொண்டு சென்றவர் கைதானார்.

கடந்த மூன்று நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 33 கிலோகிராம் கஞ்சாவுடன் பதினொரு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கரன்னகொட, தசநாயக்க மீதான விசாரணையை இடைநிறுத்தக் கோருவதற்கு அதிகாரம் இல்லை

## சட்டமா அதிபர் நேற்று தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 29

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவுறுத்துவதற்கு அரசியல் பழிவாங்கல் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

தமது விசாரணைகள் நிறைவுபெறும் வரை கடற்படையின் ஓய்வுபெற்ற அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் ரியர் அட்மிரல் டி.கே.பி. தசநாயக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை இடைநிறுத்துமாறு அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு, சட்டமா அதிபருக்கு நேற்று முன் தினம் அறிவித்தது.

2015 ஜனவரி 8ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 16ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராய்ந்து தகவல்களைத் திரட்டுவதற்காக ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

11 இளைஞர்களைக் கடத்திச்சென்று காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் வசந்த கரன்னகொட மற்றும் டி.கே.பி. தசநாயக்க ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பாகவும் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அந்த வழக்கில் அரசியல் அழுத்தத்துக்கு ஏற்ப நீதிமன்றத்தில் சட்ட ரீதியிலான நடவடிக்கையை ஆரம்பிப்பது தொடர்பாக ஆணைக்குழு அதிக கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜனாதிபதி ஆணைக்குழு சாட்சி விசாரணைகளை நிறைவு செய்து ஜனாதிபதிக்குச் சிபாரிசுகளை முன்வைக்கும்வரை வசந்த கரன்னகொட மற்றும் தசாநாயக்க ஆகியோர் தொடர்பிலான வழக்கு விசாரணையை மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் முன்னெடுத்துச்செல்வது தொடர்பிலான எந்தவொரு நடவடிக்கையும் சட்டமா அதிபர் அல்லது அவரது அதிகாரத்தைப் பெற்ற அதிகாரி ஒருவரினால் முன்னெடுக்கப்படக்கூடாது என ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவுறுத்துவதற்கு அரசியல் பழிவாங்கல் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை என சட்டமா அதிபர் நேற்று அறிவித்துள்ளார். (ஐ)

**நாளை 30.01.2020 – வியாழக்கிழமை**

நட்சத்திரம்: உத்திரட்டாதி பி.ப 2.17 வரை
திதி : பஞ்சமி பி.ப 12.13 வரை

இராகுகாலம் : 2.06 – 3.36
சுப நேரம் : 8.06 – 9.36

## கொரோனா தாக்கத்துக்குத் தீர்வு காண மஹிந்த தலைமையில் விசேட கூட்டம்



கொழும்பு, ஜன. 29

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசேட சந்திப்பை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொரோனா வைரஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிகிச்சை வழங்குவதற்காக ஐ.டி.எச். வைத்தியசாலை உட்பட 12 வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.தே.கவை துண்டாடுவதற்கு நினைத்தால் தொலைவீர்கள்!

### அகிலவிராஜ் எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 29

கட்சித் தலைமைத்துவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவிய முரண்பாடுகள் ஓரளவு முடிவுக்கு வந்துள்ளன. கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்து இருப்பார்.

அவர் தலைமையில் கட்சியைக் கொண்டு நடத்துவதே எமது தீர்மானம். இந்தநிலையில், ஐ.தே.கவுக்குள் இருந்துகொண்டும் வெளியில் இருந்துகொண்டும் கட்சியைத் துண்டாட யாரும் நினைத்தார்கள் என்றால் அவர்கள் முகவரியற்றுப்போவார்கள் என்பது உறுதி.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியைத் துண்டாட வெளியில் இருப்பவர்கள் சதித்திட்டங்களை வகுத்து வருகின்றார்கள். இந்தச் சதித்திட்டங்களுக்கு கட்சிக்குள் இருப்பவர்களும் துணைபோகின்றார்கள். 'தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும்' என்ற கோரிக்கையின் பெயரில் வகுக்கப்பட்ட சதி நடவடிக்கை எம்மால் முறியடிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருப்பவர்கள் அனைவரும் எந்தச் சதி நடவடிக்கைகளுக்கும் துணைபோகாமல் கட்சியை வளர்க்க வேண்டும் என்பதே கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பமாகும் – என்றார். (ஐ)

## வுனியாவில் தொடரும் சோதனை நடவடிக்கை



வவுனியா, ஜன. 29

வவுனியா – புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 5 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஓமந்தை, புளியங்குளம் அதனை அண்மித்த பகுதிகளில் கடந்த சில நாட்களாக மோப்ப நாயின் உதவியுடன் சோதனைகள் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் புளியங்குளம் புதூர் பகுதியில் இராணுவச் சோதனைசாவடியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை வழி மறித்து சோதனையிட்ட சமயத்தில் 3 கிலோகிராம் கேரளா கஞ்சாவினை பயணப்பொதியில் வைத்திருந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அதில் ஒருவர் கடற்படைச் சிப்பாய் ஆவார்.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இ.போ.சபை சோதனையிட்டபோது, 2 கிலோ கிராம் கஞ்சா சிக்கியது. அதைக் கொண்டுசென்றவர் கைதானார்.

கடந்த மூன்று நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 33 கிலோகிராம் கஞ்சாவுடன் பதினொரு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனா வைரஸ் நோயாளி பல பகுதிகளுக்கும் சென்றார்

கொழும்பு, ஜன. 29

உலகை அச்சுறுத்தும் ஆட்கொல்லி நோயான கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்ட சீனப் பெண் தொடர்பில் பல முக்கியமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

43 வயதான இந்த சீன பெண் கடந்த 19 ஆம் திகதி மேலும் சில சீனர்களோடு இலங்கைக்குச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்காக வந்துள்ளார் எனச் சுகாதார அமைச்சின் இயக்குநர் நாயகம் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் தனது சுற்றுலாக் குழுவுடன் மீண்டும் சீனா நோக்கி செல்வதற்கு ஆயத்தமாக இருந்தபோது காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளார். பின்னர் அவர் அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எப்படியிருப்பினும் அவருடன் வந்த ஏனைய சீனர்கள் மீண்டும் தங்கள் நாட்டை நோக்கிச் சென்றுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான இந்தப் பெண் பயணித்த இடங்கள் மற்றும் அவர் தங்கியிருந்த இடங்கள் தொடர்பில் தகவல்கள் அனைத்தும் சுகாதார அதிகாரிகளினால் சேகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் இயக்குனர் நாயகம் அனில் ஜயசிங்க மேலும் கூறினார். இந்தப் பெண் பயணித்த இடம் மற்றும் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று சோதனையிடுவதற்குச் சுகாதார சேவை அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அங்கிருந்த ஏனையவர்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தப் பெண்ணின் இரத்த மாதிரியை மேலதிக பரிசோதனைக்காக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.29

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம், ஒரு பகுதி, உதயபுரம், மணியம்தோட்டம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில்-**

மதவுவைத்தகுளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம், பம்பைமடு கிராமம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார் Palmyra house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyra house, கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத்திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com



# இந்தியக் குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக அமெரிக்காவில் 30 நகரங்களில் போராட்டம்

## குடியரசுத் தினத்தன்று பரவலாக நடந்தது

வொஷிங்டன்,ஜன.29

இந்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக, அமெரிக்காவிலும் போராட்டம் நடந்தது. அமெரிக்கவாழ் இந்தியர்கள் இப்போராட்டங்களை நடத்தினர்.

வொஷிங்டன், நியூயோர்க், சிகாகோ, ஹூஸ்டன், அட்லாண்டா, சான் பிரான் சிஸ்கோ உள்பட 30 நகரங்களில் போராட்டம் நடந்தது. சிகாகோவில் நடந்த போராட்டத்தில், பெருமளவிலான இந்தியர்கள் பங்கேற்றனர். அவர்கள் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு மனித சங்கிலியாக நின்றனர். வொஷிங்டனில், வெள்ளை மாளிகை அருகே ஒரு பூங்காவில் இருந்து இந்திய தூதரகம் வரை ஊர்வலம் சென்றனர். பிரதமர் மோடிக்கு எதிராகக் கோம் எழுப்பினர்.

அதே சமயத்தில், அவர்களுக்கு, குடியுரிமை சட்டத்துக்கு ஆதரவான பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த போராட்டங்களால் அமெரிக்காவில் இந்தியக் குடியரசு தினப் கொண்டாட்டங்கள் பாதிக்கப்பட்டன. விஷிங்டனில் உள்ள இந்திய தூதரகத்தில் இந்திய துணை தூதர் அமித் குமார் தேசிய கொடி ஏற்றினார்.

# தஞ்சை கோவில் குடமுழுக்கு தமிழிலும், சமஸ்கிருதத்திலும்!



மதுரை,ஜன.29

தஞ்சை பெரிய கோவில் கும்பாபிஷேகம் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் நடைபெறும் எனத் தமிழக இந்து சமய அறநிலையத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தஞ்சைப் பெரியகோவில் குடமுழுக்கை தமிழில் நடத்தக் கோரியும், குடமுழுக்கிற்கு தடை விதிக்கக் கோரியும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்குகள் நேற்று விசாரணைக்கு வந்தன.

அப்போது இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தஞ்சை பெரிய கோவிலில் தமிழ், சமஸ்கிருதம் என இரண்டு மொழிகளில் குடமுழுக்கு நடைபெறும் என தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து குடமுழுக்கு எந்த மொழிகளில் செய்யப்படும் என்பதைப் பிரமாண பத்திரமாகத் தாக்கல் செய்ய அறநிலையத்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தஞ்சை பெரிய கோயில் குடமுழுக்குக்குத் தடை கோரிய மனு மீதான விசாரணை இன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் 5ஆம் திகதி கும்பாபிகேம் நடைபெறுவதை ஒட்டி, அதன் ஆரம்ப நிகழ்ச்சியாக யாகசாலை பூஜை வரும் முதலாம் திகதி தொடங்குகிறது. அதை முன்னிட்டு,



யாகசாலையிலுள்ள யாக குண்டங்களுக்கு வர்ணம் தீட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

# ஓரினச்சேர்க்கை இணையர் வழக்கு திருமணத்தைப் பதிவுச் செய்யக்கோரி

கேரளாவைச்சேர்ந்தஓரினச்சேர்க்கை இணையர், தங்கள் திருமணத்தை சட்டப்பூர்வமானதாக பதிவுச் செய்யக் கோரிவழக்குத்தாக்கல்செய்துள்ளனர்.

இதுகுறித்து, மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க, கேரள உயர்நீதிமன்றம்



உத்தரவிட்டிருக்கிறது.

இதுதொடர்பாக, கேரளாவைச்சேர்ந்த நிகேஷ் பீ.பீ (Nikesh PP) மற்றும் சோனு எம்.எஸ் (Sonu MS) ஆகிய ஓரினச்சேர்க்கை இணையர் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த ஆண்டு தாங்கள் திருமணம் செய்து கொண்டனர் எனவும், ஆனால், அதை அங்கீகரிக்க, கோவில் நிர்வாகங்கள் மறுத்துவிட்டன எனவும் கூறப்பட்டுள்ளது.

எனவே, ஓரினச்சேர்க்கை குற்றமில்லை என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பை முன்மாதிரியாக கொண்டு, தங்கள் திருமணத்தை சட்டப்பூர்வமாகப் பதிவு செய்திட உத்தரவிட வேண்டும் என்றும் வர்கள் கோரியுள்ளனர்.

இதை விசாரித்த கேரள உயர்நீதிமன்ற நீதிபதி அனு சிவராமன் (Anu Sivaraman), ஓரினச்சேர்க்கை இணையரின் மனு குறித்து பதிலளிக்க, மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சீனாவின் சிக்கியுள்ள இந்திய மாணவர்களை இந்தியாவின் சிறப்பு விமானம் அழைத்து வரும்

புதுடில்லி,ஜன.29

கொரோனா வைரஸ் பாதிப்பின் மையப்புள்ளியாக விளங்கும் சீனாவின் வுஹான் நகரில் சிக்கியுள்ள இந்திய மாணவர்களை அழைத்து வர சிறப்பு விமானத்தை இயக்க ஏர் இந்தியா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சீனாவின் வுஹான் நகரில் முதலில் கண்டறியப்பட்ட கொரோனா வைஸ், பீஜிங், ஙங்காய் போன்ற நகரங்களில் பரவி வருகிறது. இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால், வுஹான் நகருக்கு மக்கள் செல்லவும், அங்கிருந்து வெளியேறவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பு அமெரிக்கா, ஜப்பான், கொரியா, தைவான் மற்றும் நேபாள நகரங்களுக்கும் பரவியுள்ளது. இந்த நகரில் ஏராளமான இந்தியர்கள் சிக்கியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் மருத்துவம் படிக்கும் மாணவர்கள். இது இந்திய அதிகாரிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியர்கள் குறித்த நலன் மற்றும் தகவலை தெரிந்து கொள்ள சீனாவில் உள்ள இந்தியத் தூதரகம் ஹொட்லைன் வசதியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில், இந்த வைரஸ் பரவுவதைத் தடுக்க கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேபாளம் வரை இந்த வைரஸ் பரவியுள்ளதால், அதனைத் தடுப்பது மற்றும் எதிர்கொள்வது குறித்து இந்திய அமைச்சரவைச் செயலர் ராஜிவ் கவுபா தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில், வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில், அனைத்து சர்வதேச விமான நிலையங்களிலும் , குறிப்பாக சீனாவில்



இருந்து வருபவர்களையும் கண்காணிக்கும் பணியை தீவிரப்படுத்துவது எனவும், நேபாள எல்லையில் செக் போஸ்ட்களை அமைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் வுஹான் நகரில் சிக்கியுள்ள 250க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்களை அழைத்து வர சீனாவிடம் வேண்டுகோள் விடுக்கவும், இதற்கான பணியை வெளியுறவு அமைச்சகம் செய்ய வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

சீனாவில் இருந்து இந்தியர்களை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மத்திய விமானப்போக்குவரத்து துறை மற்றும் சுகாதாரத்துறை செய்து வருகிறது. இந்தியர்களை அழைத்து வர வுஹான் நகரில் இருந்து மும்பைக்கு போயில் 747 விமானத்தை இயக்க ஏர் இந்தியா தயார் நிலையில் உள்ளது. இதற்காக சீன அரசு, வுஹான் விமான நிலைய அதிகாரிகள் அனுமதி கிடைத்தவுடன் சிறப்பு விமானம் இயக்கப்படும்.

# சீனாவிலிருந்து திரும்பியோர் கடுமையான கண்காணிப்பில்!

கோவை,ஜன.29

சீனாவில் இருந்து கோவை வந்த 8 பேர் கொரோனா வைரஸ் எதிரொலியால் பொது இடங்களுக்கு செல்லக்கூடாது என சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுக்க விமான நிலையங்களில் வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகள் தீவிர பரிசோதனை செய்யப்படுகிறார்கள்.

இந்தநிலையில் கோவை மற்றும் பொள்ளாச்சியைச் சேர்ந்த 6 பேர், திண்டுக்கல்லை ஒருவர், சென்னையை சேர்ந்த ஒருவர் என மொத்தம் 8 பேர் நேற்று முன்தினம் சீனாவில் இருந்து கோவை விமான நிலையத்துக்கு வந்தனர்.

விமான நிலையத்தில் அவர்களை சுகாதாரதுறை அதிகாரிகள் முழுமையாக பரிசோதனை செய்தனர். சோதனையில் 8 பேருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை என உறுதி செய்யப்பட்டது.

பின்னர் அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இருப்பினும் சுகாதாரதுறை அதிகாரிகள் சார்பில் 8 பேரும் 28 நாள்களுக்குப் பொது இடங்கள், திருமண நிகழ்ச்சிகள் போன்ற பொது நிகழ்வுகளுக்கு செல்லக்கூடாது எனவும், வீட்டிலேயே இருக்க வேண்டும் எனவும், இருமல், சளி, காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டால் உடனடியாக தகவல் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

# கொரோனா வைரஸ் பாதிப்புக்கு எயிட்ஸ் நோய்க்கான மருந்துகள்

## சீன அரசு சோதனை முயற்சி

எச்.ஐ.வி நோய்க்கு (எயிட்ஸுக்கு) அளிக்கப்படும் மருந்துகளை கொரோனா வைரஸ் பாதிப்புக்கு பயன்படுத்துவது குறித்து சீன அரசு சோதனை செய்து வருவதாக ஏபிவீ (AbbVie) என்ற மருந்து நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்காவின் வடக்கு சிகாகோவில் இயங்கி வரும் இந்த நிறுவனம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிவிப்பில், சீன சுகாதாரத்துறை எச்.ஐ.வி.க்கு பயன்படுத்தப்படும் மருந்துகளை கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பயன்படுத்துவது பற்றிய சோதனையில் ஈடுபட்டுள்ளது என கூறப்பட்டு உள்ளது.

நிறுவனசெய்திதொடர்பாளர் அடெல்லே இன்பான்டே கூறுகையில் –

இந்த நெருக்கடியை எதிர்கொள்ள அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவுமாறு சீன சுகாதார அதிகாரிகள் இந்த மருந்தைக் கோரினர்.

சீனாவின் தேசிய சுகாதார கமின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் படி, லொபினவிர் (lopinavir) மற்றும் ரிடோனவிர் (ritonavir) இந்த இரண்டு மருந்துகளின் கூட்டுக் கலவை மருந்து அலுவியா, எச்.ஐ.விக்கு பயன்படுத்தப்படும் நிலையில், இதனை கொரோனா வைரஸ் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு இரண்டு வேளை மாத்திரைகள் அளித்து வருவதாகவும் சுகாதார ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மருந்து எடுத்துக்கொண்டவர்களுக்கு சில நாள்களில் வைரஸின் வீரியம் குறையும் பட்சத்தில் அடுத்தகட்ட சோதனைகள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# அமெ. மெரினா படகு வீடுகளில் தீ: 8 பேர் மரணம்; பலரைக் காணோம்

அமெரிக்காவின் அலபாமாவில் மெரினா படகுவீடுகள் தீப்பற்றியதில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காணாமல் போயுள்ளனர்.

ஸ்காட்ஸ்போரோ (Scottsboro) நகரத்தில் டென்னசி (Tennessee) நதிக் கரையோரம் கட்டப்பட்டிருந்த மரத்திலான படகு வீடுகளில் பொதுமக்கள் பலர் நிரந்தரமாகவும் சிலர் வார இறுதி நாள்களைக் கழிக்கும் பொருட்டும் வாடகைக்குத் தங்கியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றிரவு படகு ஒன்றில் திடீரென பற்றிய தீ, காற்றின் வேகம் காரணமாக மற்ற படகுகளுக்கும் படகுதுறைக்கும் பரவி கொளுந்துவிட்டு எரிந்தது.

இந்த விபத்தில் 35க்கும் மேற்பட்ட படகுகள் எரிந்து நாசமாகி ஆற்றில் மூழ்கின. அதில் இருந்த குழந்தைகள், பெண்கள் உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

படகில் இருந்து ஆற்றில் குதித்து தப்பிக்க முயன்றவர்களை தீயணைப்புத்துறை வீரர்கள் தேடி வருகின்றனர்.

# ஈரானில் ஓடுபாதையில் இருந்து விலகி நெடுஞ்சாலைக்குள் புகுந்த விமானம்!

## ஈரானில் பரபரப்புச் சம்பவம்



தெஹ்ரான், ஜன.29

ஈரானில் ஓடுபாதையில் இருந்து விலகி நெடுஞ்சாலைக்கு வந்த விமானத்தால் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இருந்து குஜெஸ்தான் மாகாணத்தில் உள்ள மக்ஸ்ஹர் நகருக்கு காஸ்பியன் ஏர்லைன்ஸுக்குச் சொந்தமான விமானம் நேற்று காலை புறப்பட்டு சென்றது. விமானத்தில் 135 பயணிகள் இருந்தனர்.

மக்ஸ்ஹர் நகரை அடைந்த விமானம் அங்குள்ள விமான நிலையத்தில் தரையிறங்கியது. அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் விமானம் ஓடுபாதையில் இருந்து விலகி ஓடியது. விமானி உடனடியாக விமானத்தை நிறுத்த முயற்சித்தார்.

ஆனால் நிற்காமல் ஓடிய விமானம் விமான நிலையத்தையொட்டி உள்ள நெடுஞ்சாலைக்கு சென்றது. அங்கு தரையில் உரசி கொண்டே சென்ற விமானம் சிறிது தூரம் சென்ற பிறகு நின்றது. அதனை தொடர்ந்து விமானத்தின் அவசரகால வழியாக பயணிகள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. அதே சமயம் விமானத்தின் அடிபாகம் முற்றிலும் சேதமடைந்தது. இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு நிலவியது.

# கேக் சாப்பிடும் போட்டியில் மூச்சுத் திணறி பெண் சாவு

## ஆஸி குயின்லாந்தில் சம்பவம்



சிட்னி, ஜன.29

ஆஸ்திரேலியாவில் கேக் சாப்பிடும் போட்டியில் மூச்சு திணறி பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

ஆஸ்திரேலியாவில் இரண்டு தினங்களுக்கு முன்னர் தேசிய தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி குயின்லாந்து மாகாணத்தின் ஹெர்பிபே நகரில் உள்ள பிரபல நட்சத்திர ஹோட்டலில் ஆஸ்திரேலியாவின் பாரம்பரிய உணவுப்பொருளான லாமிங்டோன் எனப்படும் கேக் சாப்பிடும் போட்டி நடத்தப்பட்டது.

இதில் ஆண்கள், பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு கேக்குகளைச் சாப்பிட்டனர். அப்போது போட்டியில் கலந்து கொண்ட 60 வயது பெண் ஒருவருக்கு திடீரென தொண்டையில் கேக் சிக்கியது.

அதனைத் தொடர்ந்து மூச்சு திணறல் ஏற்பட்டு அவர் மயங்கினார். உடனடியாக அவரை மீட்டு அம்புலன்ஸில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனத் தெரிவித்தனர்.

# கொரோனா வைரஸ் தாக்குதல் குறித்து எதிர்வு கூறியிருந்தாராம் பில் கேட்ஸ்

வாஷிங்டன், ஜன.29

சீனாவை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தாக்குதல் குறித்து மைக்ரோசொவ்ட் நிறுவுநர் பில் கேட்ஸ் கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பே கணித்தொ பேசியுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவில் புதிய வகை கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவி அந்நாட்டு மக்களிடையே அதிக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த டிசம்பர் மாத இறுதியில் வுகான் நகரில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது. வெளிநாடுகளுக்கும் இந்த வைரஸ் பரவத் தொடங்கி உள்ளது.

நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், முதியோர் உட்பட பலர் இந்த வைரஸுக்கு பலியாகி உள்ளனர். மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதற்கிடையே, சீனாவில் கொரோனா வைரஸ் காய்ச்சலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 106 ஆக உயர்ந்துள்ளது. மேலும், 2,000 பேர் வரை பாதிப்பு அடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், மைக்ரோசொவ்ட் நிறுவுநர் பில் கேட்ஸ் ஓர் ஆண்டுக்கு முன்பே கொரோனா வைரஸ் தாக்குதல் குறித்து பேசியுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

மைக்ரோசொவ்ட் நிறுவுநரான பில் கேட்ஸ் கடந்த



ஆண்டு மசாசூட்ஸ் மருத்துவ சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில், இந்த உலகம் முழுவதும் விரைவாக பரவுகின்ற சூப்பர் வைரஸால் பாதிக்கப்பட உள்ளது. இந்த வைரசால் முதல் 6 மாதத்தில் 3 கோடி 30 லட்சம் பேர் இறக்கக் கூடும்.

அந்த வைரஸால் உலகப் போர் ஏற்படும் ஆபத்தும் உள்ளது. எனவே அந்த வைரஸ் தாக்குதலில் இருந்து காப்பாற்றுவதற்கு நாம் தயாராக வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

காலைக்கதிர்
Kalaikathir



# சிங்கள அரசியல் அரங்கை திணறடிக்க வைக்கும் திரைப் பிரபலங்கள்



விஜே குமாரதுங்க, காமினி பொன்சேக, மாலினி பொன்சேக, கீதா குமாரசிங்க என்ற நடிகர்கள் வரிசையில் அரசியலுக்கு வந்த ரஞ்சன் ராமநாயக்க என்ற நடிகர் சிங்கள அரசியல் அரங்கில் சகலரையும் திணறடிக்க வைத்துள்ளார். இதனால் பிரதமர், அமைச்சர்கள் மட்டுமன்றி பலர் கேள்விக்குறியாகி உள்ளனர். கோட்டா அரசு புலி வாலைப் பிடித்த நிலையிலுள்ளது.

இலங்கையின் சிங்கள,பௌத்த அரசியலில் இப்போது அதிகம் பேசப்படுபவர் அல்லது பேசு பொருளாக இருப்பவர் ரஞ்சன் ராமநாயக்க எனும் இளம் அரசியல்வாதி.

இவரை அரசியல்வாதி என்பதிலும் பார்க்க தலைசிறந்த நடிகர், பாடகர், திரைப்பட தயாரிப்பாளர் என கலைஞர்களில் ஓர் ஓல்ரவுண்டர் என்று கூறுவதே பொருத்தம்.

கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசிய கட்சி பிரசாரகராக விளங்கியமை யோடு, எதிர்கட்சியினரை கைக்குள் இருந்த ஆதாரங்களை வெளிப்படுத்திக் கிழித்துத் தள்ளியவர்.

அரசியல் பழிவாங்கலாக இவரது இல்லத்தை இந்த மாதம் நான்காம் திகதி சோதனையிட்ட புலனாய்வுத்துறையினர், அனுமதிப் பத்திரம் பெறாத கைத்துப்பாக்கியை அங்கிருந்து மீட்டனர் என அறிவித்தனர். அத்துடன் சில ஒலிப்பதிவு தட்டுகளையும் மீட்டனர் என அறிவிக்கப்பட்டது.

அந்த ஒலித்தட்டுகளில் பலதுறைப் பிரமுகர்களுடன் ரஞ்சன் நடத்திய தொலைபேசி உரையாடல்கள் பதியப்பட்டிருந்தன. இவற்றுள் சிலவற்றை சில சமூக ஊடகங்கள் எவ்வாறோபெற்று வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டன.

நீதிபதிகள், அரசியல்வாதிகள், அவர்களின் மனைவிமார், சில நடிகைகள் என்று பலதரப்பட்டோருடனான உரையாடல்கள் இதில் இடம்பெற்றிருந்தமையால், விளக்கமறியலிலுள்ள ரஞ்சனின் கைது, கோட்டாபய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புலி வாலைப் பிடித்த கதையாகியுள்ளது.

சப்ரகமுவ மாகாணசபையின் எதிர்கட்சித் தலைவர் பதவியுடன் ஆரம்பமான இவரது அரசியல் வாழ்வு, பின்னர் கட்டான தொகுதி எம்.பியாகி, ராஜாங்க அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளையும் பெற வழிசமைத்தது.

ஆனால், அவரது துடுக்குத்தனம் பலருக்கு சங்கடங்களை ஏற்படுத்தியதோடு அவரையும் நெருக்கடிக்குள் தள்ளியது. இதனால் ஐக்கிய தேசிய கட்சி அவரைத் தற்காலிகமாக வெளியேற்றியுள்ளது.

விளக்கமறியலில் இருந்தவாறு நாடாளுமன்றம் சென்ற இவர் முக்கியமான ஒரு உரையை அங்கு நிகழ்த்தி அனைவரையும் உலுக்கியுள்ளார்.

தாம் பாதுகாப்பாக வைத்திருக்கும் பெட்டகங்களில் மேலும் பல குரல் பதிவுகள் உள்ளன என்றும், அதில் மஹிந்த ராஜபக்ஷவின் குரலும் அடங்கும் என்றும், பல அரசியல்வாதிகளின் உரையாடல் பதிவுகளும் அவற்றில் உண்டென்றும் முறிப்பிட்டு, அவற்றை எடுத்துவரத் தம்மை இரண்டு நாள் பிணையில் விடுமாறு இவர் விடுத்த வேண்டுகோள் பலரது அடிவயிற்றையும் கலக்கியுள்ளது.

இவரது ஒலிப்பதிவுகள் அம்பலமானமையால் இதுவரை இரண்டு நீதிபதிகள் பதவி இழந்துள்ளனர். இன்னொரு நீதிபதி விசாரணைக்கு முகம் கொடுத்துள்ளார்.

அரசியல்வாதிகள் நீதிபதிகளுடன் தொடர்பு கொள்வதும் அவர்களுக்காகத் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதும் இதுதான் முதன்முறையன்று.

1970களில் சிறிமாவோ அரசாங்கத்தில் நீதியமைச்சராகவிருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க சில நீதிபதிகளின் சுதந்திரத்தில் தலையிட்டு அவர்களைத் தனது கால்களுக்குள் போட்டு நசுக்கியமயை நாடாளுமன்ற அறிக்கையில் பார்க்கலாம்.

1977இல் பிரதமராகத் தெரிவான ஜே.ஆர். ஜெயவர்த்தன தமது வழக்கறிஞரான நெவில் சமரக்கோன் என்பவரை பிரதம நீதியரசராக நியமித்தார். நியமங்களை மீறித் தமது நேரடித் தெரிவாக இந்த நியமனத்தை ஜே.ஆர். வழங்கினார்.

1978 பெப்ரவரி 4ஆம் திகதி அதே பிரதம நீதியரசரின் முன்னிலையில் காலிமுகத்திடலில் ஜே.ஆர். முதலாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

ஆனால், அடுத்த சில வருடங்களுக்குள் பாடசாலை ஒன்றின் நிகழ்வில் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் உரையாற்றுகையில் ஜே. ஆரை விமர்சனம் செய்தமையால் அவர்களுக்குள் முரண்பாடு ஏற்பட்டது. சினங்கொண்ட ஜே.ஆர். பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்ய முனைந்தபோது, விடயமறிந்த நெவில் சமரக்கோன் பதவியிலிருந்து தாமாகவே விலகி ஆஸ்திரேலியா சென்று குடியேறிவிட்டார்.

ஆர்.பிரேமதாச ஆட்சிக்காலத்தில் ஒரு வழக்கில் தனக்குச் சாதகமான தீர்ப்பை வழங்க மறுத்த நீதிபதி ஒருவரின் இல்லம் பிரேமதாசவின் கையாள்களால் கல்வீச்சு நடத்தி தாக்கப்பட்டது. பொலிஸாரின் உதவியை நீதிபதி கோரியபோதும் அவர்கள் அந்த இடத்துக்குச் செல்லவில்லை.

இந்த விடயங்களைத் தெரிந்து கொண்ட ரஞ்சன் ராமநாயக்கவின் விவகாரம் அப்போதைய சம்பவங்கள் போன்று பார்க்கப்படவில்லை. ஏனெனினும் இவரது எம்.பி. பதவியை பறிக்க ஒலிப்பதிவுகளை சரியான ஆதாரமாக்கப் பார்க்கிறது ராஜபக்ஷ குடும்பம்.

இச்சந்தர்ப்பத்தில், சிங்கள அரசியலில் ஏற்றமும் இறக்கமும் கண்ட சில நடிகர்களின் கடந்த கால வரலாற்றைப் பார்ப்பது நல்லது.

123 திரைப்படங்களில் நடித்து சிங்களத் திரைவானில் உச்சத்தில் இருந்த விஜேகுமாரதுங்க சிறிலங்கா மகாஜனக் கட்சியின் நிறுவுனர். சந்திரிகா பண்டாரநாயக்கவை திருமணம் செய்த பின்னர் சுதந்திரக் கட்சியில் இணைந்து அதன் தேசிய அமைப்பாளரானார்.

1977 இல் கட்டான தொகுதியில் பெருவெற்றி பெற்று நாடாளுமன்றம் புகுந்த இவரை ஜனாதிபதி ஜெயவர்த்தன நக்சலைட் என்று கூறி சில காலம் சிறைக்குள் தள்ளினார். அரசியலில் ஒரு துருவமாக ஓங்கி வளர்ந்து சென்ற இவர் 1988 பெப்ரவரியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனைச் செய்தவர்கள் ஜே.வி.பி.யின் இராணுவப் பிரிவினர் என்று சொல்லப்பட்டது. ஆனால் விசாரணை ஆணைக்குழு அறிக்கை ஆர்.பிரேமதாஸ மற்றும் அமைச்சர்களான ரஞ்சன் விஜேரத்ன, காமினி லொக்குகே ஆகியோரைக் குற்றம் சாட்டியது.

இவர்களுள் முதல் இருவரும் கொழும்பில் வெவ்வேறு சம்பவங்களில் படுகொலை செய்யப்பட்டுவிட்டனர். காமினி லொக்குகே இப்போதும் அரசியலில் உள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசவினால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவர் பிரபல கதாநாயக நடிகர் காமினி பொன்சேக. 1989 இல் ஐக்கிய தேசிய கட்சி ஊடாக மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு எம்.பியானவர் காமினி. இவருக்கு பிரதிச் சபாநாயகர் பதவியும் பிரேமதாஸவினால் வழங்கப்பட்டது.

1994ல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா குமாரதுங்க வடகிழக்கு இணைந்த மாகாணசபையின் ஆளுனராக காமினியை நியமித்து தாம் விரும்பிய எதையோ நிறைவேற்றிக் கொண்டார். ஆனால்காமினி அரசியல்சாக்கடைக்குள் அமிழ்ந்து போகாது மெதுவாக அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார்.

காமினி பொன்சேகவின் பெருமளவான திரைப்படங்களில் கதாநாயகியாக நடித்து பெயர் பெற்ற மாலினி பொன்சேக. 1968 இலிருந்து திரையுலகில் புகழ் பெற்று விளங்கியவர். 2010 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் ஊடாக நியமனம் பெற்று எம்.பியானார் ஆயினும், இரண்டாண்டுகளின் பின்னர் 2012ல் அரசியலுக்கு குட்பை கூறிச் சென்றுவிட்டார்.

இந்த வகையில் காமினியும் மாலினியும் (இவர்கள் நிஜ வாழ்வில் கணவன் மனைவி அல்லர்) ஒரே முடிவை குறுகிய காலத்தில் எடுத்தமையால் தங்கள் பெயரை களங்கப்படுத்தாது தப்பிவிட்டனர்.

இன்னொரு சிங்கள் நடிகையான கீதா குமாரசிங்க. 2017 மே மாதம் நடைபெற்ற தேர்தலில் காலி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

மைத்திரி – ரணில் அரசு நிறைவேற்றிய 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் இவரது பதவிக்கு ஆப்பு வைத்தது. இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்தில் பதவி வகிக்க முடியாது என்ற புதிய சட்டத்திருத்தத்தால் கீதா குமாரதுங்க பதவி இழக்க நேர்ந்தது.

இலங்கைப் பிரஜாவுரிமையுடன் சுவிஸ் நாட்டுப் பிரஜாவுரிமையையும் இவர் வைத்திருந்தமையால் மேன்முறையீட்டு நீதிமன்றம் இவரது எம்.பி. பதவியை பறித்தெடுத்தது.

இவர்களைப் போன்று ரஞ்சன் ராமநாயக்க தப்பியோடக் கூடியவராகத் தெரியவில்லை. 'நான் மருத்துவமனைக்குச் சென்று படுக்க மாட்டேன். சிறைச்சாலைக்குச் சென்று எல்லா உண்மைகளையும் வெளிப்படுத்துவேன்' – என்ற இவரது கூற்று ஏதோ ஒன்றை சொல்லாமற் சொல்கிறது.

பல அரசியற் பிரமுகர்களின் மனைவிமார், துணைவிமாரின் ஒலிப்பதிவுகள் இவரிடம் இருந்துள்ளன என்பது தற்போது பரம ரகசியம்.

ஏன் இதனைச் செய்தார், எதிர்கால அரசியல் திட்டம் ஏதாவது இவருக்குண்டா,இவர் ஒரு மனநோயாளி இல்லை என்பதால் விசாரணைகளின் பின்னர் பல அதிர்ச்சியான தகவல்கள் வெளிவருமென எல்லாக் கட்சி அரசியல்வாதிகளுமே நம்புகின்றனர். அடுத்த சில மாதங்களுள் வரவிருக்கும் பொதுத் தேர்தல் சமயம் இந்தக் கேள்விகளுக்கு பதில் கிட்டுமென எதிர்பார்க்கலாம்..

நல்லவேளை, தமிழர் தரப்பில் ஒரு நடிகர்கூட அரசியல்வாதியாக தெரிவாகி நாடாளுமன்றம் செல்லவில்லை. ஆனால் பல தமிழ் அரசியல்வாதிகள் வாழ்நாள் நடிகர்களாக எம் மத்தியில் உலா வருகின்றனர். சந்தர்ப்பம் வரும்போது அவர்களைச் சந்திப்போம்.

**நன்றி - பதிவு இணையம்**
**பனங்காட்டான் (கனி)**

# சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தை நியமிப்பது பீதியை ஏற்படுத்தும்

## வரதராஜப்பெருமாள் சுட்டிக்காட்டு

தமிழ் மக்களுடைய மனங்களை வெல்லுவதற்கு முயற்சிப்பதாக இருந்தால் இராணுவ அதிகாரிகளைச் சிவில் நிர்வாகங்களிலோ அல்லது மக்களோடு நேரடியாக தொடர்புடைய விடயங்களிலோ நியமிப்பதைத் தவிர்த்து கொள்வது மிகநல்ல விடயம் என்றுதான் கருதுவதாக முன்னாள் வடக்கு – கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்களிடையே வவுனியாவில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முக்கியமாக எங்கள் கட்சியை எப்படி கிராமங்கள் தோறும் கட்டி எழுப்புவது என்பது தொடர்பாகவும், வேலைத்திட்டங்களை விரிவாக எப்படி கொண்டு செல்வது என்பது பற்றியும், அதற்கான என்ன நடைமுறை, வேலைத்திட்டங்கள் என்ன என்பது பற்றியும் ஆராய்ந்தோம்.

அதேபோல எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலே நாங்கள் எவ்வாறான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க போகின்றோம் எனவும் கலந்துரையாடினோம்.

ஏனென்றால் பலரும் நினைப்பது போல கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே நாங்கள் எடுத்துக்கொண்ட நிலைப்பாட்டைத்தான் நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலிலும் எடுப்போம் என்று இல்லை.

எங்களைப் பொறுத்தவரை ஒரு புதிய விதமான அணுகுமுறை உள்ளது. ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலின் போது இருந்த நிலைமை என்பது வேறு. அங்கே இரண்டு வேட்பாளர்களில் யாரை தேர்வு செய்வது என்ற தெரிவில் மட்டும்தான் அந்தத் தேர்தல் சம்பந்தப்பட்டது.

ஆனால் இங்கே தங்கள் பிரதிநிதிகளை நேரடியாகத் தெரிவு செய்யும் தேர்தல் ஒன்றை மக்கள் எதிர்நோக்கப் போகிறார்கள்.



அது பெரும்பாலும் ஏப்ரல் மாதம் கடைசியில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் நடக்கக்கூடும்.

அந்தத் தேர்தலிலை நாங்கள் எவ்வாறு எதிர்நோக்க போகிறோம் என்கின்ற விடயத்திலே ஒரு பரந்த அளவில் தமிழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய முற்போக்கான சிந்தனையும் தமிழ் மக்களுடைய அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டவர்களாகவும் – தமிழ் மக்களுடைய உரிமைகள் தொடர்பாக விடாப்பிடியாகக் குரல் எழுப்புபவர்களாகவும் இருக்கக்கூடிய கட்சிகள் இரண்டு விடயத்திலும் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்கள் பிரதேசம் எங்கும் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிடும்.

தனியாக போட்டியிடவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் தனியாகவும் போட்டியிடுவோம். எனினும் நாங்கள் ஐக்கியத்தை விரும்புகிறோம்.

முற்போக்கான சக்திகளெல்லாம் இணைந்து செயல்பட வேண்டும் என்று விரும்புகிறோம்.

தற்போது இராணுவ அதிகாரிகள் உயர் பதவிகளை வகிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக வடக்கில் ஓய்வுப் பெற்ற இராணுவ அதிகாரிகளைச் சிவில் நிர்வாகப் பகுதிகளில் உயர் பதவிகளில் நிறுத்தியிருக்கிறார்கள். ஜனநாயக நாட்டில் அதாவது கூடுதலாக தமிழர் பிரதேசங்களில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் தமிழ் மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்படுவது என்பது நியாயமானது தான்.

ஆனால் உலகத்தைப் பொறுத்தவரை எல்லா ஜனநாயக நாடுகளிலும் எங்களுக்கு பக்கத்தில் இருக்கின்ற இந்தியாவில் போய் பார்த்தீர்கள் என்றாலும் கூட அவ்வாறே நியமித்திருக்கிறார்கள்.

அரசைப் பொறுத்தவரை இராணுவ அதிகாரிகள் மிகச்சிறந்த நிர்வாகிகள். ஏனென்றால் ஆயிரக்கணக்கானவர்களைக் கட்டி மேய்த்தவர்கள். அவர்கள் நிர்வாகத்திறமை கொண்டவர்கள் என்று அரசு கருதுகிறது.

அந்தவகையில் தனிப்பட்ட கம்பனிகளில் கூட இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவுடனே ஒருவரைத் தன்னுடைய கம்பனிக்கு அழைத்து நிர்வாகத்தில் பொறுப்பு கொடுப்பது என்பது உலகம் முழுவதும் நடக்கிறது.

இங்குள்ள மக்களுடைய மனநிலையில் பிரச்சினை என்னவென்றால், கடந்த காலத்தில் யுத்த நிலைமையில் ஏற்பட்ட அந்த மனோபாவம். அதிலிருந்து இராணுவத்தை போடக்கூடாது என்ற எண்ணத்தை கொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள். அந்த எண்ணத்தை அரசும் கருத்திலெடுத்து செயல்பட வேண்டியது அவசியம்.

ஏனென்றால் ஜனாதிபதியே சொல்லியிருக்கிறார், தனக்கு வாக்கு போடாவிட்டாலும் பரவாயில்லை தமிழ் மக்களுடைய மனங்களை வெல்லுவதற்குத் தான் முயற்சிப்பேன் என்று. அப்படி தமிழ் மக்களுடைய மனங்களை வெல்லுவதற்கு முயற்சிப்பதாக இருந்தால் இந்த இராணுவ அதிகாரிகளை இங்கு சிவில் நிர்வாகங்களிலோ அல்லது மக்களோடு நேரடியாக தொடர்புடைய விடயங்களிலோ நியமிப்பதை தவிர்த்து கொள்வது மிகநல்ல விடயம் என்று தான் நாங்கள் கருதுகிறோம் – என்றார். (ஐ – 100)

# முதலைக்கதை சொன்னவர்கள் பல்டியடித்தனர்!

கொழும்பு, ஜன. 29

தமிழர்களைக் கடத்தி முதலைக்கு இரையாக்கியதாக குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய வெள்ளை வான் சாரதிகள் இருவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்னவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்துள்ளனர்.

உண்மைகளைக் கூறவேண்டாமென தமக்கு ராஜித தரப்பிலிருந்து உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக இருவரும் முறையிட்டுள்ளனர். (ஐ)

# செல்வச்சந்நிதி கேணியில் சிறுவனின் சடலம் மீட்பு!



யாழ்ப்பாணம், ஜன. 29

தொண்டைமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயக் கேணியில் சிறுவன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்.

சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த கணேசமூர்த்தி புவிதரன் (வயது - 18) என்ற சிறுவனே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆலயத்துக்கு வந்த பக்தர்கள் கேணியில் சிறுவனின் சடலம் இருப்பது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ - 07)

# கல்வியங்காட்டில் பெண்ணிடம் தங்க ஆபரணங்கள் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஜன. 29

கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த பெண் ஒருவரிடம் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தப் பெண் பஸ்ஸுக்குக் காத்திருந்தவேளை, யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அந்தப் பெண்ணிடமிருந்த தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

பட்டப்பகல் வேளை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், பாதிக்கப்பட்டவர் கல்வியங்காடு ஞானவைரவர் கோயிலடியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ – 07)

# கொரோனா குறித்து தகவல்கள் பெற தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 29

கொரோனா வைரஸ் தொடர்பில் பொதுமக்களுக்கு உள்ள சந்தேகங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள சுகாதார அமைச்சில் சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவுக்கான தொலைபேசி இலக்கங்கள் சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவுக்கு அழைப்பை எடுத்து பொதுமக்கள் உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

0710107107, 0113071073 ஆகிய இலக்கங்களுக்கு அறிவித்து தகவல் பெற முடியும்.

# ரயிலில் மோதுண்டு இளைஞர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புணானைப் பகுதியில் வைத்து மீனகயா ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

வயல் காவலில் ஈடுபட்டிருந்த நிலையில் வாழைச்சேனை புணானை ரயில் நிலையத்துக்கு இடைப்பட்ட ரயில் கடவையில் கையடக்கத் தொலைபேசியில் பாட்டு கேட்டிருந்தவேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணமான மீனகயா ரயில் கடந்த ஞாயிறு இரவு 9.10 மணி அளவில் மயிலந்தனை புணானையைச் சேர்ந்த ஜேக்கப் ஜோன் ஜோன்சன் (வயது – 19) என்ற இளைஞனே ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார்.

வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# இங்கிலாந்திடம் மண்டியிட்டது தென்னாபிரிக்கா!

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து அணி 191 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3 – 1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

ஜோகனஸ்பெர்க் மைதானத்தில் கடந்த 24ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 400 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஸெக் கிரௌவ்லி 66 ஓட்டங்களையும், ஜோ ரூட் 59 ஓட்டங்களையும், ஒல்லி போப் 56 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.



தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், என்ரிச் நோர்ட்ஜே 5 விக்கெட்டுகளையும், வெர்னொன் பிளெண்டர் மற்றும் டேன் பெட்டர்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், பியுரன் ஹென்ரிக்ஸ் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 183 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குயிண்டன் டி கொக் 76 ஓட்டங்களையும், டுவைன் பிரிடோரியஸ் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், மார்க் வுட் 5 விக்கெட்டுகளையும், கிறிஸ் வோக்ஸ் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சேம் கர்ரன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 217 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 248 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் தென்னாபிரிக்கா அணிக்கு 466 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ஜோ ரூட் 58 ஓட்டங்களையும், டோமினிக் சிப்ளி 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், பியுரன் ஹென்ரிக்ஸ் 5 விக்கெட்டுகளையும், என்ரிச் நோர்ட்ஜே மற்றும் டுவைன் பிரிடோரியஸ் 2 விக்கெட்டுகளையும், டேன் பெட்டர்சன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 466 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, 274 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இங்கிலாந்து அணி 191 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ராஸ்ஸி வெண்டர் டஸன் 98 ஓட்டங்களையும், குயிண்டன் டி கொக் 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், மார்க் வுட் 4 விக்கெட்டுகளையும், ஸ்டுவர்ட் பிரோட் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், கிறிஸ் வோக்ஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மார்க் வுட்டும், தொடரின் நாயகனாக பென் ஸ்டோக்சும் தெரிவு செய்யப்பட்டனர்.

# ஐ.பி.எல். தொடரில் புதிய விதிமுறைகள்!

இந்தியாவில் நடைபெறும் ரி – 20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்துக்கான தயார்ப்படுத்தல்கள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொடருக்கான ஏலம் கொல்கத்தாவில் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், அந்த ஏலத்தில் ஒவ்வொரு அணிகளும் தங்களுக்குத் தேவையான வீரர்களைத் தேர்வு செய்தது.

இதற்கிடையில் நடப்பு ஆண்டு ஐ.பி.எல். தொடரில் அறிமுகமாகும் புதிய விதிமுறைகள் குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி அறிவித்துள்ளார்.

இந்தத் தொடர் குறித்து முக்கிய ஆலோசனைகள் நடத்துவதற்காக ஐ.பி.எல். நிர்வாகக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது. இதன்போது கங்குலி விதிமுறைகள் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறிய கருத்துக்கள் இவை.

ஐ.பி.எல். தொடர் தொடங்கும் இரு நேரத்திலும் எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை. போட்டியை இரவு 7.30 மணிக்குத் ஆரம்பமாவது குறித்து ஆலோசிக்கப்பட்டாலும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆதலால், வழக்கம் போல் மாலை 4 மணிக்கும், இரவு 8 மணிக்கும்தான் போட்டி தொடங்கும்.

இந்த முறை ஐ.பி.எல் தொடரில் புதிய விதிமுறைகள் அறிமுகமாகின்றன. நோ போலுக்கு மூன்றாவது நடுவரை அணுகும் முறை அறிமுகமாகிறது. அதேபோல டெஸ்ட் போட்டியில் இருப்பது போன்று கன்கஸன் மாற்று வீரரைக் களமிறக்கும் முறை அறிமுகமாகிறது. அதாவது ஒரு வீரருக்குக் காயம் ஏற்பட்டு விளையாட முடியாமல் போனால், அவருக்குப் பதிலாக மற்றொரு வீரரைக் களமிறக்கி விளையாட வைக்கலாம்.

ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டியை எங்கு நடத்தப்போகிறார்கள் என்று பல்வேறு யூகங்கள் எழுந்தன. குஜராத்தின் அகமதாபாத்தில் நடத்தப்படும் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் வரும் மே 29ஆம் திகதி மும்பையில் ஐ.பி.எல். இறுதிப்போட்டி நடக்கும். அதில் மாற்றமில்லை.

போட்டியின் அட்டவணை, போட்டிகள் தொடங்குவது, உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் ஜெய் ஷா விரைவில் வெளியிடுவார்.

இது தவிர ஐ.பி.எல். தொடர் மார்ச் 29 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அதற்கு முன்பாக அகமதாபாத் மைதானம் அமைப்பதற்காக ஒல்ஸ்டார்ஸ் கிரிக்கெட் போட்டி ஒன்று நடத்தப்பட உள்ளது. அது குறித்தும் பின்னர் அறிவிக்கப்படும். பாண்ட்யாவின் உடல்நிலை முழுமையாகக் குணமடையவில்லை. அவர் தேசிய கிரிக்கெட் பயிற்சி நிலையத்தில் தங்கி இருக்கிறார். அவர் குணமடைந்து விளையாடுவதற்குச் சிறிது காலமாகும்' என கூறினார்.

வெளிநாட்டு வீரர்களை உள்ளடக்கிய ஐ.பி.எல் ரி 20 கிரிக்கெட் தொடர், கடந்த 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்தியாவில் சிறந்த உள்ளூர் வீரர்களை இனங்காண்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தத் தொடர், சர்வதேச வீரர்களின் வருகையால், இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் இரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்த நிலையில், ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்தப் போட்டித் தொடருக்கான எதிர்பார்ப்பு நீண்டு கொண்டே தான் செல்கின்றது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 12 ஐ.பி.எல். தொடர்களில், டெல்லி கேப்பிடல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றதே கிடையாது.

ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கன் சார்ஜஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒரு முறையும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மூன்று முறையும், கொல்கத்தா அணி இரண்டு முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி நான்கு முறையும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 12 ஐ.பி.எல். தொடர்களில், டெல்லி கேப்பிடல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றதே கிடையாது.

ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கன் சார்ஜஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒருமுறையும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மூன்று முறையும், கொல்கத்தா அணி இரண்டு முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி நான்கு முறையும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.

# கிரிக்கெட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் பிளெண்டர்!

தோல்வியுடனும் அபராதத்துடனும் சர்வதேச கிரிக்கெட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் பிளெண்டர்!

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு சகலதுறை வீரரான வெர்னோன் பிளெண்டர், சர்வதேச கிரிக்கெட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

34வயதாகும் வெர்னோன் பிளெண்டர், சொந்த மண்ணில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை இழந்த மனவேதனையுடனும், அபராதத்துடனும் சர்வதேச கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்துள்ளார்.

ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற இறுதி டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து வீரர் ஜோஸ் பட்லரை ஆட்டமிழப்பு செய்த பிறகு பிலாண்டர் அவரை தகாத வார்த்தைகளால் திட்டியதால், அவருக்கு 15 சதவீதம் அபராதம்



விதிக்கப்பட்டது.

இரு அணிகளுக்கிடையிலல் நடைபெற்ற நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, 3 – 1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி வென்றது. இத்தொடரில் வெர்னோன் பிளெண்டர், 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

1985 ஜூன் மாதம் 24ஆம் திகதி தென்னாபிரிக்காவின் பெல்வில்லி நகரில் பிறந்த வெர்னோன் பிளண்டர் 2004ஆம் ஆண்டு தனது 19ஆவது வயதில் முதல்தரப் போட்டியில் அறிமுகமானார்.

இதன்பிறகு தனது 22ஆவது வயதில் 2007ஆம் ஆண்டு முதல் முறையாக அயர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் விளையாடியதன் மூலம் சர்வதேச அறிமுகத்தை பெற்றுக் கொண்டார். தான் விளையாடிய முதலாவது சர்வதேச போட்டியிலேயே 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றி அனைவரினதும் கவத்தை ஈர்த்த பிளெண்டர், அதே ஆண்டு செப்டம்பரில் மேற்கிந்திய தீவுகள் அணியுடன் ரி 20 சர்வதேச அறிமுகத்தையும் பெற்றுக்கொண்டார்.

இதன்பிறகு கடந்த 2011ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணியுடன் டெஸ்ட் அறிமுகத்தை பெற்றுக்கொண்டார்.

ஸ்வீங் முறையில் பந்துவீசும் திறமைக் கொண்ட பிளெண்டரால், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் நிலைத்து நிற்க முடியவில்லை. அவர் இறுதியாக 2015ஆம் ஆண்டு ஒருநாள் போட்டியில் விளையாடியிருந்தார்.

எனினும், தென்னாபிரிக்கா டெஸ்ட் அணியில் முக்கிய வீராகவும் அசைக்க முடியாத வீரராகவும் திகழ்ந்த பிளெண்டர், தற்போது வயது மற்றும் உடற்தகுதி ஆகிய காரணங்களை முன்னிறுத்தி தனது ஓய்வு அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற பிளெண்டருக்கு தற்போது இன்னாள் மற்றும் முன்னாள் வீரர்கள், இரசிகர்கள், பிரபலங்கள் என பலரும் சமூகவலைதளங்களின் ஊடாக வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பல வெற்றிகளுக்கு சொந்தக்காரரான பிளெண்டர், அதிகவேகமாக 50 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய இரண்டாவது வீரர், வேகமான 100 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆவார். இந்த சாதனையை அவர் 19ஆவது டெஸ்ட் போட்டியில் எட்டினார்.

இதுதவிர, 912 புள்ளிகளுடன் டெஸ்ட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதலிடத்திலும் இருந்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலிடத்தைப் பிடித்த அணியின் ஒரு வீரராகவும் முத்திரை பதித்த அவர், 2012ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியின் சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ஜெக் கல்லீஸின் ஓய்வுக்குப் பிறகு கல்லீஸின் இடத்தை நிரப்பிய வீரராக பிளெண்டர் பார்க்கப்படுகிறார்.

இதுவரையில் 64 டெஸ்ட் போட்டிகளில் 8 அரைச் சதங்களுடன் 1,619 ஓட்டங்களையும், பந்துவீச்சில் 13 ஐந்து விக்கெட்டுக்களுடன் 224 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

இதுதவிர 30 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 41 விக்கெட்டுக்களையும், 7 ரி – 20 சர்வதேச போட்டிகளில் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

# யாழ்., மட்டு விமான நிலையங்களை தரமுயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 29

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலை யங்களை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவை கள் நிறுவனத் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கட்டுநாயக்கா விமானநிலையத்தின் இரண்டாவது நுழைவாயிலைநிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கானஒப்பந்தம் ஜப்பான் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்படவுள்ளது. விமானநிலையத்துக்குள்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் பயணிகளின் வசதிக்காக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய விசேட வேலைத்திட்டமொன்றுநடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அத்துடன்கட்டுநாயக்கா, மத்தள, இரத்மலானை உள்ளிட்ட சர்வதேச விமான நிலையங் களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்றும் தயாரிக் கப்பட்டு வருகிறது - என்றார். (ஐ)

## இலங்கையிலுள்ள சீனர்களுக்கும் விசேட மருத்துவப் பரிசோதனை!

கொழும்பு, ஜன. 29

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள் ளான ஒருவர் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து நாட்டிலுள்ள அனைத்து சீனத் தொழிலாளர்களையும் விசேட மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதார அமைச்சு தீர்மா னித்துள்ளது.

கட்டட மற்றும் இதர துறைகளில் சீனத் தொழிலாளர்கள் பணிபுரியும் வேலைத் தளங்களுக்குச் சென்று இந்த மருத்துவப் பரிசோதனைகளை நடத்த தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீன புத்தாண்டு கொண் டாட்டங்களுக்காக சென்று இலங்கை திரும்பும் சீனப் பிரஜைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முகக்கவசம் இறக்குமதி

கொழும்பு, ஜன. 29

உடனடியாக முகக் கவசங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சந்தைகளில் முகக் கவசங்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதனை சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி டாக்டர் கமல் ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் முகக் கவசங்களை விரைவாகத் தயாரிக்குமாறும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## ஷானிக்கு வாகனம் கொடுத்துதவிய பொலிஸ் அதிகாரி மீதும் விசாரணை!

கொழும்பு, ஜன. 29

பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள முன்னாள் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஷானி அபேசேகர பயணம் செய்ய, பொலிஸ் திணைக்களத்தின் வாகனமொன்றை வழங்கிய பொலிஸ் உயரதிகாரி குறித்து பொலிஸ் திணைக்களத்தினால் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

2015 இற்கு முற்பட்ட பல முக்கிய வழக்குகளை விசாரித்து உண்மைத்தன்மைகளை வெளிக்கொணர்வதில் ஷானி முக்கிய பங்கு வகித்திருந்தார்.

எனினும், ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய வெற்றியீட்டியதும், முதலாவது நடவடிக்கையாக ஷானியை பதவி நீக்கி, அவரை தென்மாகாண பிரதிப் பொலிஸ்மாஅதிபரின்தனிப்பட்ட உதவியாளராக நியமித்தார்.

இது பழிவாங்கும்நடவடிக்கையென பரவலான விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், ரஞ்சனின் குரல்பதிவை காரணம் காட்டி ஷானி கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

தற்போது, ஷானியின் வாகனப் போக்குவரத்து விவகாரம் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. ஷானிக்கு வாகனத்தைக்கொடுத்த பொலிஸ் அதிகாரி, சி.சி.ரி.வி. காட்சிகளின் அடிப்படையில் விசாரணையை எதிர்கொள்வதாக தெரிவிக்கப் படுகிறது. (ஐ)

## சீன சுற்றுலாப் பயணிகளுக்கு வருகை விஸா உடனடி ரத்து!

### இலங்கை அரசு அறிவிப்பு

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சீனாவிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான வருகை நுழைவிசைவு (On Arrival Visa) இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சீனாவில் தாக்கம் ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இந்த அவசர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

கொழும்பு நோயியல் வைத்திய சாலையில் சீன நாட்டுப் பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை நேற்று முன்தினம் மாலை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அவசர நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுத்துள்ளது. அத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் பயணிகள் தவிர்ந்த பார்வையாளர்களுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## சட்டவிரோத மீன்பிடியால் பாதிப்பு: அமைச்சர் டக்ளஸிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 29

சட்டவிரோத மீன்பிடி முறைகள் பயன்படுத்தப்படுவதனால் சிறுதொழிலாளர்களாகிய தாங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமையோடுகடல் வளங்களும் அழிக்கப்படுவ தாக பூநகரி பிரதேச கடற்றொழிலாளர் கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் முறையிட்டுள்ளனர்.

எனவே இதற்கு உடனடியாக சட்டவிரோத மீன்பிடி முறைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தினை மீண்டுத் தருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சுக்கு சென்ற பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் அம்பாறை, காலிப் பிரதேசங்களின் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளனர்.

இதன்போது, பூநகரிப் பிரதேச கடற்பிரதேசத்தினுள் பிரவேசிக்கின்ற ஏனைய பிரதேச மீனவர்கள், அனுமதியற்ற சிலிண்டர்கள், வெளிச்சம் பாய்ச்சுதல் மற்றும் அனுமதிக்கப்படாத இழுவைப் படகுகள் போன்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுப்படுவதனால் சிறுதொழிலில் ஈடுபடுகின்ற பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் கடல் வளமும் பாரிய அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளதாக அமைச்சரிடம் பூநகரிப் பிரதேச கடற்றொழிலாளர்களினால் முறையிடப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பாக அவதானம் செலுத்திய அமைச்சர், பூநகரிப் பிரதேசத்துக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்வதுடன் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் கடற்படையினரும் பங்குபற்றும் வகையில் கலந்துரையாடலை ஒழுங்கு செய்து அதனூடாக சட்டவிரோத மீன்பிடி முறையில் ஈடுபடுகின்றவர்களைத் தடுப்பது தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார்.

அதேபோன்று அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தாவைச் சந்தித்த அம்பாறை மாவட்ட மீனவர்கள், கரையோர சூழலியல் பாதுகாப்பு திணைக்களத்தினர் மேற்கொள்ளும் கட்டுப்பாடுகள் காரணமாக கடற்றொழிலாளர்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்வதாகவும் குறிப்பாக கடற்றொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான கிணறுகள் மற்றும் மலசலகூடம் போன்றவற்றைகூட அமைப்பதற்கு முடியாத நிலை காணப் படுவதாகவும் தெரிவித்தனர். கடற்றொழிலாளர் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை கேட்டறிந்த அமைச்சர், சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து பிரச்சினைகளை ஆய்வு செய்து நியாயமான தீர்வுகளைப் பெற்றுத் தருவார் என உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# மத்திய வங்கி பிணை முறி மோசடி; ரவி கருணாநாயக்க எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஜன. 29

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடியுடன் தாம் தொடர்புபட்டிருக்கவில்லை என்பது வங்கியின் தடயவியல் ஆய்வறிக்கை ஊடாக அம்பலமாகியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்குளிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எந்தக் குற்றமும் இன்றி ஊடகங்களை வைத்து உருவாக்கப்பட்ட பிரச்சினை தொடர்பில் நாங்கள் பொறுமையுடன் பதில் வழங்கியுள்ளோம். இதுதான் உண்மை என்பது கூறப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் தடயவியல் அறிக்கை தற்போது வெளிவந்து இன்று நான் முழுவதிலும் விடுவிக்கப்பட்டுள்ளேன். எவ்வளவு காலஞ் சென்றாலும் உண்மை வெல்லும் என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

கோப் குழுவின் ஊடாக நடவடிக்கை எடுத்து உண்மையை அம்பலப்படுத்த வேண்டும். 2002ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை அப்போதைய ஆட்சியினால் பல விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் ஏற்பட்ட தவறுகளைக் கோப் குழுவுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் நான்கு அல்லது ஐந்து நபர்களே உண்மையான குற்றவாளிகள் எனக் கூறுகின்றேன்.

அப்போதைய ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மலிக் சமரவிக்ரம, மங்கள சமரவீர, கபீர் ஹாஷிம், ஹர் டி சில்வா, சுஜீவ சேனசிங்க, எரான் விக்ரமரத்ன உள்ளிட்டவர்களால் வெறுமையான பிரச்சினை ஒன்றையே ஏற்படுத்தினார்கள்.

இன்று விடுதலையாகியிருக்கின்றோம். ஆகவே இந்த கட்சிக்கு இழைத்த பிழையை சரிப்படுத்துமாறு கோருகின்றேன். இதுவரை ஏற்பட்டவற்றை ஓரங்கட்டி ஐக்கிய தேசியக் கட்சியாக முன்நகர்வோம். ஒற்றுமையாக பயணிப்பதே இப்போதைய தேவையாக உள்ளது. மக்கள் இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

# சீனாவிலிருந்து இலங்கை திரும்பியவர்களை தனி அறையில் இரு வாரங்கள் வைக்க முடிவு

கொழும்பு, ஜன. 29

சீனாவின் வூஹானில் இருந்து வருகை தரும் இலங்கை மாணவர்கள் அனைவரையும் தியத்தலாவ இராணுவ முகாமில் வைத்து கண்காணிக்க உள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொடர்பில் தெளிவூட்டும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவர்கள் பாதுகாப்பான முறையில் தனி அறைகளில் வைத்து 2 வாரங்களுக்குக் கண்காணிக்க உள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைமுறைக்கு வந்தது புதிய தடை!

*கொழும்பு, ஜன. 29*

*கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் செல்பவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக விமான சேவை தலைவர் தெரிவித்துள்ளார்.*

*அதற்கமைய, வெளிநாடு செல்லும் மற்றும் வரும் பயணிகளைத் தவிர உறவினர்கள் அனைவரும் விமான நிலைய வளாகத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*நேற்றுக் காலை 6 மணி முதல் இந்தத் தடை அமுலுக்கு வந்துள்ளது என அவர் அறிவித்துள்ளார்.*

*பயணிகளை தவிர மற்றவர்கள் அனைவரும் தற்காலிக நடவடிக்கையாக விமான நிலையத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் என விமான நிலையத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*இலங்கையில் முதலாவது கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உட்பட்ட நோயாளி அடையாளம் காணப்பட்ட நிலையில் இந்த தடை அமுலாகியுள்ளது.*




# சுதந்திர தினத்தை துக்க நாளாக அனுஷ்டிக்க காணாமற்போனோரின் உறவுகள் அழைப்பு

கொழும்பு, ஜன. 29

இலங்கையின் சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த அழைப்பை வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பத்மநாதன் கருணாவதி விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இறுதி யுத்தத்தில் கையளிக்கப்பட்ட தமது பிள்ளைகள் தொடர்பாக அரசு அக்கறை செலுத்தாத நிலையில், சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு அரசு தயாராகி வருகின்றது.

இந்த நிலையில் சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனைத்து மக்களையும் அனுஷ்டிக்குமாறும் அன்றைய தினம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இடம்பெறவுள்ள போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் அழைக்கிறோம்.

சுதந்திர தினத்தன்று வடக்கிலும் கிழக்கிலும் சம நேரத்தில் போராட்டங்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார்.



# இலங்கை மாணவர்கள் 204 பேர் சீனாவிலிருந்து வெளியேறினர்

கொழும்பு, ஜன. 29

சீனாவில் இருந்து இதுவரை 204 இலங்கை மாணவர்கள் வெளியேறியுள்ளனர் எனச் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் சீனா – வூகானிலுள்ள 33 இலங்கை மாணவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக தொடர்ந்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகச் சீனாவில் உள்ள இலங்கை தூதகரகம் தெரிவித்துள்ளது.

சீனாவில் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகி இதுவரை 106 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், 4515 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாத இறுதியில் வூகான் நகரில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவி, பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளுக்கும் இந்த வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், கொழும்பில் உள்ள தொற்று நோய்கள் தொடர்பான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சீன பெண்ணுக்கு கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் மஹிந்த, கோட்டாபய தொடர்பு

## லக்ஷமன் கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 29

ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பின்னால் தற்போதைய புதிய அரசுக்கு தொடர்பிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மறைமுகமாகச் சாடியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

ரணில் – மைத்திரி தலைமையிலான அரசுக்கு களங்கம் ஏற்படுத்தவும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும் காரணமாக இருந்த இந்த தீவிரவாத தாக்குதல்கள் நடத்தப்பட்டு ஒரு வருடமாகின்ற நிலையிலும் இதுவரை பிரதான சூத்திரதாரிகள் கைது செய்யப்படவில்லை.

ஈஸ்டர் தினத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது. கடந்த வருடம் நடத்தப்பட்ட தாக்குதலினால் மக்களிடையே இன ஐக்கியம் வீழ்ந்தது.

இந்த தாக்குதல் காரணமாகவே எமது அரசு தோல்வியுற்றது. இந்த அரசால் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்கிற அச்சம் மக்களிடையே ஏற்பட்டது.



ஈஸ்டர் தினத் தீவிரவாத தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை இந்த அரசு கைது செய்யாது என்பதை நிச்சயமாகக் கூறுகின்றேன்.

இந்த புதிய அரசு ஆட்சிக்கு வந்தமைக்கான காரணம், ஈஸ்டர் தாக்குதலாகும். சஹ்ரானுக்கு ஒரு காலகட்டத்தில் அரசால் சம்பளம் வழங்கப்பட்டதாகவும் அம்பலப்படுத்தப்பட்டது.

ஆகவே யார் இதற்குப் பின்னால் செயற்படுகிறார்கள் என்பது புலனாகின்றது. எமது அரசை அவமானத்திற்கு ஏற்படுத்துவதற்கான செயற்பாடாகவே இந்த தாக்குதலையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்த தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எப்போது கைது செய்யப்படுவார்கள் என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றோம் – என்றார். (ஐ)

# காணி அபகரிப்பை எதிர்த்து புங்குடுதீவில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 29

புங்குடுதீவு – மடத்துவெளிப் பகுதியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் உள்ள கடற்படை முகாமை மேலும் விஸ்தரிக்கும் முயற்சி, அப்பகுதி பொது மக்களின் எதிர்ப்பையடுத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தீவகம் தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில், நேற்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே, இந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.



புங்குடுதீவு – எட்டாம் வட்டாரம் (ஜே/23), மடத்துவெளி, ஸ்ரீ முருகன் கடற்றொழில் சங்கத்தின் அருகில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான 10 பரப்பளவைக் கொண்ட காணியில், 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில், கடற்படையினர் சிறிய முகாமொன்றை அமைத்திருந்தனர்.

யுத்தம் நிறைவடைந்தப்பின்னர், அந்தக் காணி உரிமையாளர், தனது காணியை விடுவிக்குமாறு, கடற்படையினரிடம் கோரிய போதும் அவர்கள் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

இதனால் காணி உரிமையாளர், வீட்டுத்திட்டத்தையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டார்.

இந்நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்னர், மேற்படி முகாமை பாரிய முகாமாக்கும் செயற்பாடுகளை கடற்படையினர் முன்னெடுத்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே, நேற்றுக் காலை இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, போராட்ட இடத்துக்கு வருகை தந்த கிராம சேவகர், தீவகம் தெற்குப் பிரதேசச் செயலக அதிகாரிகள், ஊர்காவற்றுறை பொலிஸார், புங்குடுதீவுக் கடற்படை முகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர்.

இதையடுத்து, முகாமை மேலும் விஸ்தரிக்கும் முயற்சி நிறுத்தப்படுமென உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, போராட்டம் கைவிடப்பட்டது.

இக்காணி விவகாரம் தொடர்பாக, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் காணி உரிமையாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ – 07)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
௨0 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2020 இல் வெளியிடப்பெற்றது.

# பாடசாலைக்கு அண்மையில் அமைக்கப்படும் கோபுரத்தை அகற்றுமாறு மாணவர் போராட்டம்





யாழ்ப்பாணம், ஜன. 29

தென்மராட்சி, மறவன்புலவுவில் அமைக்கப்பட்டு வரும் காற்றலை மின் உற்பத்தி நிலையத்தின் கோபுரத்தை அகற்றக் கோரி மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய மாணவர்களும் பெற்றோர்களும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலையில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டு வரும் கோபுரத்தின் அமைக்க வேண்டாம் என்று கோரியே இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (ஐ-07)

# பெரும் அரசியல் தலையீடுகளினால் கிழக்கு மாகாணக் கல்வி சீரழிகிறது

## ஜனதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்கின்றது தமிழர் ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஜன. 29

கிழக்கு மாகாணத்தில் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவைகளுக்கு மதிப்பளித்து நடைபெறுகின்ற கல்வி தொடர்பான செயற்பாடுகளில் மிகையான அரசியல் தலையீடுகள் செலுத்தப்பட்டு கிழக்கு மாகாணத்தின் கல்வி பெரும் பாதிப்புறும் நிலையில் உள்ளது.

இந்த விடயங்களை உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அதிபர்களின் நியமனங்கள், அதிபர்களின் இடமாற்றங்கள், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் போன்ற பல விடயங்களில் மாகாணக் கல்வி அமைச்சும், மாகாணக் கல்வித் திணைக்களமும், வலயக்கல்வித் திணைக்களங்களும் செயற்படுத்த முனைகின்ற பல செயற்பாடுகள் தடுக்கப்படுகின்றமையோடு முறையற்ற விதங்களில் செயற்பட அதிகாரிகள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணம் தழுவிய அதிபர்களின் இடமாற்றம் முறையான இடமாற்ற சபைக்கூடாக செயற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பெருமளவான அதிபர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. ஆனால் சிலரது இடமாற்றங்கள் அரசியல் தலையீடுகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இது பல்வேறு மட்டங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு தற்போதைய அரசின் மீதும் அதிருப்தியை ஏற்டுத்தியுள்ளது.

அவ்வாறே ஆசிரியர்களின் இடமாற்றங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர்களை அச்சுறுத்தும் விதத்தில் அரசியல் கட்சி சார்ந்த பிரமுகர்கள் செயற்படுகின்றமையும், இடமாற்றங்களைச் செய்வதற்கு வற்புறுத்துகின்றமையும். அப்பிரமுகர்கள் சார்ந்த கட்சி மீதும், அந்தக் கட்சியின் தலைமை மீதும் கல்விப் புலம் சார்ந்தவர்கள் மட்டுமன்றி அனைவரிடத்திலிருந்தும் அதிருப்திகள் தோன்றியுள்ளன.

இத்தகைய விடங்கள் கட்சியின் தலைமைப் பீடங்களுக்குத் தெரியாமல் நடைபெறுகின்றனவா? அல்லது தெரிந்தே நடைபெறுகின்றனவா? என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேள்வி எழுப்பி ஜனாதிபதியிடன் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே ஒன்பது மாகாணங்களில் பின்னடைவைக் கண்டுள்ள கிழக்கு மாகாணம் இத்தகைய செயற்பாடுகளால் இன்னும் அந்த நிலையில் இருந்து மீள்வதற்கு வாய்ப்பே இல்லை என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சம்பந்தமில்லாத நபர்கள், அரசியல் கட்சிகளின் பெயர்களைச் சொல்லி அச்சுறுத்தும் பாணியில் நடந்துகொள்கின்றமை அநாகரீகமான செயற்பாடு மட்டுமன்றி மக்கள் நலன் சார்ந்து ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பங்கத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.

ஆகையால் ஜனாதிபதி விரைந்து நேரடியாகத்தலையிட்டு இதற்கான முற்றுப் புள்ளியை வைக்காவிடில், நிலைமைகள் இன்னும் மோசமாகி அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து ஒட்டுமொத்த கிழக்கு மாகாண மக்களையும் வெறுப்படையச் செய்யும் - என்றுள்ளது. (ஐ)

### உலக மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைவ ஆர்வலர்களின் ஏற்பாட்டில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஏழாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் ஆலயத்தில் ஸ்ரீ மஹா ருத்ர யாகம் நடைபெறும்.

இந்த மகா யாகத்தில் வேத பாராயணங்கள் மற்றும் பல்வேறுபட்ட விடயங்கள் இடம்பெறவுள்ளன. அனைத்துப் பொதுமக்கள் மற்றும் சைவத் தமிழ் ஆர்வலர்களை யாகத்தில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

### கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்களான அருட்பணி வீ. யோகேஸ்வரன், கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஆகிய இருவரும் ஒப்பமிட்டு வெளியிட்டு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரிடம் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவினால் 17.01.2020 அன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை பின்வரும் விடயங்களை குறிப்பிட்டிருந்தது:

*'காணாமல் ஆக்கப்பட்டோர் யாவரும் இறந்து விட்டனர்.'*

*'காணாமல் ஆக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளால் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டோர்.'*

*'தேவையான விசாரணைகளின் பின்னர் அவர்களுக்கான இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.'*

*'அதன் பின்னர் அவர்களுக்கான உதவி வழங்கப்படும்.'*

*'காணாமல் ஆக்கப்பட்டோர் யாவரும் இறந்து விட்டனர்'* என்று எதனை அடிப்படையாகக்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார் என்பதைத் தமிழ் சிவில் சமூக அமையம் அறிய விரும்புகின்றது.

இதேபோன்று பொறுப்பற்ற விதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் 26.01.2016இல் கருத்து தெரிவித்திருந்தாலும் போரில் இறுதி அங்கத்தின்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி அவ்வாறானவோர் கருத்தை கூறும் போது அது தரவுகளின் அடிப்படையிலானதாக அமையலாம் என ஊகிக்க இடமுண்டு.

அவ்வாறெனின் போரின் இறுதி நாள்களில் (தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வாவின் 58ஆவது படையணியிடம் சரணடைந்தவர்கள் அவ்வாறாக சரண் அடைந்த பின்னர் கொல்லப்பட்டார்கள் என ஜனாதிபதி உறுதிப் படுத்துகிறாரா என்ற கேள்வி எழுகின்றது.

இறுதிப் போர்க் களத்தில் முக்கிய பிரிவு ஒன்றிற்கு (53ஆவது படையணி) தலைமை ஏற்றிருந்த வரும் தற்போதைய பாதுகாப்புச் செயலாளருமான மேஜர் ஜெனரல் கமால் குணரத்தினவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் சரணடைந்தவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்கள்.

'காணாமல் ஆக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளால் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டோர்' என்ற ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்தக் கருத்து முழுமையானவோர் உண்மை அல்ல என்ற விடயத்திற்கப்பால் விடுதலைப் புலிகளால் வலுக்கட்டாயமாகப் படையில் சேர்க்கப்பட்டவர்கள் சரணடைவின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டு இறந்து விட்டார்கள் என்பது எந்த விதத்தில் நியாயப்படுத்தக் கூடியது என்ற கேள்வி எழுகின்றது.

எந்த வகையில் அவ்வாறு அவர்கள் கொலை செய்யப்பட்டமை போர் நெறிமுறைகளுக்கும் சட்டங்களுக்கும் இலங்கை அரசமைப்பில் விதந்துரைக்கப்படும் நீதிச் செயன்முறைக்கும் ஏற்புடையது என்ற கேள்விகள் எழுகின்றன.

விசாரணைகளின் பின்னர் இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும் என்ற கூற்று நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியதல்ல. விசாரணை என்பதன் மூலம் ஜனாதிபதி ராஜபக்ஷ கூற வருவது யாது? அனைவரும் இறந்துவிட்டார்கள் என பொத்தம் பொதுவாக முடிவெடுத்து விட்டு அதனை நியாயப்படுத்தியும் விட்டு பின்னர் விசாரணை நடத்துவோம் என்று கூறுவது வேடிக்கையானது.

போர் வெற்றி நாயகர்களை ஒரு போதும் சிறையில் அடைக்கமாட்டேன் எனக் கூறும் ஜனாதிபதி விசாரணை நடத்துவேன் என்று கூறுவது வினோதமானது. ஜெனீவா செயன்முறைகளுக்கு கணக்கு காட்டுவதற்காக உருவாக்கப்பட்ட காணாமற்போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் முடக்கப்படும் என்ற செய்திகள் நிலைமையின் மோசகரமான நிலையை எடுத்து இயம்புகின்றன.

'அதன் பின்னர் அவர்களுக்கான உதவி வழங்கப்படும்'.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நாம் பொருளாதார உதவியை வழங்குவோம் என்று கூறுவதன் மூலம் பொருளாதாரப் பிழைத்தலுக்கும் தமது உறவுகளை தேடி அறிதலுக்கும் இடையில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்யுங்கள் என்று அரசு கூறுவது கொடுமையானது. பொருளாதார நலிவுற்ற மக்கள் தமது உரிமையை கேட்கக் கூடாது என்பது சனநாயக விரோதமானது என்பதோடு அவர்களின் சுய கௌரவத்தை இழிவுபடுத்துவதுமாகும்.

#### ஐ.நாவின் மௌனம்

ஜனாதிபதி ராஜபக்ஷ மேற்சொன்னவற்றை ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியுடனான உத்தியோகபூர்வ சந்திப்பில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கப்பட வேண்டியது. இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்துக்களுக்கு ஐ.நாவின் பதிலென்ன என்ற கேள்வி எழுகின்றது.

2008-2009 இல் இலங்கையில் ஐ. நாவின் செயற்பாடுகள் தொடர்பில் செயலாளர் நாயகம் பான் கி மூனினால் கோரப்பட்டிருந்த சார்ள்ஸ் பெற்றியின் அறிக்கையின் முடிவுகளை நாம் ஐ.நாவுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். தொடர்ச்சியான அமைதி, உடனடி துலங்களின்மை போன்றவற்றால் இலங்கையில் ஐ.நா கட்டமைக்கப்பட்ட ஓர் நிறுவனம் சார் தோல்வியயை சந்தித்ததாக சார்ள்ஸ் பெற்றி தனது அறிக்கையில் 2012இல் குறிப்பிட்டிருந்தார். அவ்வறிக்கையில் இருந்து ஐ.நா பாடம் படித்திருந்தால் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவின் நிலைப்பாட்டுக்கு காத்திரமான ஒரு பதிலை வழங்கியிருக்க வேண்டும்.

காலம் தாழ்த்தியேனும் அது நடக்க வேண்டுமென நாம் உரிய தரப்புக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். நீதிக்கும் பொறுப்புக் கூறலுக்குமான தமிழர்களின் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் ஆணி வேராகும்.

இந்த நேரத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு நாம் வலிமை சேர்ப்பது அவசியமாகும். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் எமது உறவுகளுக்கான போராட்டம் என்ற மன ஓர்மத்தோடு அவர்களுடைய போராட்டத்தில் இணைந்து வலிமை சேர்க்குமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம் -என்றுள்ளது. (ஐ-07)